# உன்னைவிட்டால் யாருமில்லை!

## 1

அன்று எந்த நிமிடத்திலும் ஆபரேஷன் நடக்கலாம். மொத்த மருத்துவர்களும் கூடி விவாதித்து, அப்படித்தான் தீர்மானித்திருந்தனர்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கைனகாலஜிஸ்ட் எனப்படும் மகப்பேறு மருத்துவ இயலில் தேர்ந்த மருத்துவர்களில் ஒருவரைத்தான் அதற்காக நியமித்திருந்தனர்.

அவர் டாக்டர் விஜயலட்சுமி பாஸ்கர்.

டாக்டர் விஜயலட்சுமி, அதை அவர்களிடம் கோரிக்கையாக விடுக்கவும் செய்திருந்தார். அதற்கு ஒரு பிரத்தியேகக் காரணமும் இருந்தது.

குழந்தை பெறவிருக்கும் சாராம்மா ஜேக்கப், விஜயலட்சுமி யின் கல்லூரிப்பருவத் தோழியும்கூட,

கல்லூரியில் புகமுக வகுப்பு முதல் பி.எஸ்ஸி வரை ஒன்றாகப் படித்தவர்கள். விஜயலட்சுமி மருத்துவத் துறைக்குத் திரும்பியபோது, சாராம்மா பி.ஜி. பக்கம் போனார்.

கடைசியில் சாராம்மா கல்லூரிப் பேராசிரியை ஆனார். விஜயலட்சுமி டாக்டர் ஆனார்.

அவர்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க ஒரு வேறுபாடும் இருந்தது. டாக்டர் விஜயலட்சுமி திருமணமாகாதவர்.

எதனால் அவர் இன்னும் திருமணம் செய்து கொள்ள வில்லை என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த ஒரு ரகசியம்.

கடுமையான ஒரு காதல் தோல்விதான் அதன் பின்னணி என்று ஒரு சிலர் கூறுகின்றனர். அதற்குக் காரணமாக அவர்கள் சுட்டிக்காட்டுவது, விஜயலட்சுமியுடன் ஒரு காலத்தில் சதா சர்வகாலமும் தென்பட்ட மருத்துவக் கல்லூரி மாணவர் ஒருவர் அகாலமாக விபத்தில் மரணமடைந்த நிகழ்ச்சியைத் தான். அதுதான் அவரது திருமண வாழ்வின் விரக்திக்குக் காரணம் என்று ஒரு சாரார் யூகிக்கின்றனர், அவ்வளவுதான்.

சாராம்மா ஜேக்கப்பின் திருமணமும் விசித்திரமானதுதான். முப்பத்தைந்து வயது வரை திருமணம் செய்யாமலே காலத்தைக் கடத்திய அவர், தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்த ஒருவர். அப்போது குறிப்பிடத்தக்க வேலை எதுவும் இல்லாதிருந்த ஜேக்கப் ஸ்டீபன் ஒரு பெரும் பணக்காரனாக இருந்தார். அதைவிட அவர் ஆணழகனாக இருந்ததும் என்பது தான் மற்றொரு காரணம்.

அவர்கள் சந்தித்துக் கொண்டதே எதிர்பாராமல் தான். ஜேக்கப் ஸ்டீபன், தனது தூரத்துச் சகோதரி ஒருவரின் திருமணத்தை ஒட்டி நடந்த பார்ட்டியில்தான் சாராம்மாவைச் சந்தித்தார்..

ஜேக்கப் ஸ்டீபனும் அப்போது ஒரு தனி மனிதர்தான். அதாவது அநாதைதான்.

ஒரு காலத்தில் கலிபோர்னியா நகரில் ஓட்டல் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார் சொல்லாமல் கொள்ளாமல் திடுமென்று ஸ்டீபன் ஒரு நாள் திரும்பி வந்தார். அவருக்கு மூன்று சகோதரிகள் இருந்தனர். அவர்தான் எல்லோருக்கும் மூத்தவன்.

தனது சொந்த ஊரில் ஒரு பொதுப் பள்ளிக்கூடம் நடத்த வேண்டும் என்பது தான் அவரது நோக்கம். அதற்குத் தேவையான இடம் நகருக்குள்ளயே இருந்தது. அமெரிக்காவில் வேலை செய்தபோது அவர் வாங்கிப் போட்ட இடம் அது.

திருமணம் முடிந்து இரண்டு வருடங்களுக்குப் பிறகு சாராம்மா கர்ப்பவதியானார். கர்ப்பமடைந்த நாள் முதல் அவர்



பல்வேறு தொல்லைகளுக்கு அடிமையாக இருந்தார். குறிப்பாக வயது சற்று அதிகமாகிவிட்டதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று தோழியான விஜயலட்சுமி எச்சரித்திருந்தார்.

அது மட்டுமின்றி வேறொரு அசாதாரணமான காரணமும் இருந்தது. ஸ்கேனிங் செய்து பார்த்தபோது அவரது வயிற்றில் இருப்பது இரட்டைக் குழந்தைகள் என்பது தெரிந்தது.

இரண்டும் பெண்குழந்தைகள்!

அன்று மதியம் ஒரு மணியிலிருந்து சாராம்மா மிகவும் வருத்தத்துடன் இருந்தார். இருப்பினும் பிற சோதனைகள் எல்லாம் முறைப்படி தொடரவே செய்தன.

மாலை நேரமானபோது வேதனை அதிகரித்தது.

சாராம்மாவை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போனார்கள்.

விஜயலட்சுமிதான் அந்தச் சூழ்நிலையைச் சமாளித்தவர். கடைசியாக ஒரு தீர்மானத்துக்கு வந்தனர்.

இரவு எட்டு மணியிலிருந்து பத்து மணிக்குள் இயற்கையான முறையில் பிரசவம் நடக்கவில்லை என்றால் உடனடியாக ஆபரேஷன் செய்வதென்று முடிவெடுத்தனர்.

நிமிடங்கள் ஒவ்வொன்றாகக் கடந்து கொண்டிருந்தன.

ஜேக்கப் ஸ்டீபனைப் பொறுத்த வரையிலும் அந்த நாட்கள் மிகவும் சிக்கல் நிறைந்தவையாக இருந்தன.

அதில் கிளப்பில் நடைபெற்ற எதிர்பாராத சம்பவமும் ஒன்று.

சீட்டு விளையாட்டில் ரம்மி விளையாடும் பழக்கம் ஜேக்கப்புக்கு உண்டு. பெரும்பாலும் விளையாட்டில் வெற்றி பெறுவது அவர்தான். அவர் தோல்வியடைவதென்பது எப்போதாவது தான். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அளவுக்கு அதிகமாகக் குடிப்பார்.

மூன்று நாட்களுக்கு முன்னால் ஒரு சம்பவம் நடந்தது.

ஜேக்கப், வழக்கமாக அவருடன் விளையாடும் மற்றொருவருடன் வாக்குவாதம் செய்ய நேர்ந்தது.

அந்த வாக்குவாதத்தின் தொடர்ச்சி நகரின் மையத்திலுள்ள பார் ஒன்றிலும் தொடர்ந்தது.

எதிராளி பெரும் பணக்காரர் என்பது மட்டுமல்ல, ஒரு குண்டர் படையின் தாதாவும்கூட. திடகாத்திரசாலியான ஜேக்கப், விவாதத்தின் பலனாக சுரேஷ்பாபு என்பவனைத் தாக்க நேர்ந்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பழிக்குப்பழி வாங்குவதாகச் சபதம் செய்துவிட்டு சுரேஷ்பாபு பாரிலிருந்து வெளியேறினான்.

ஏற்கெனவே தன் மனைவி மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டிருந்ததால் நிம்மதியற்றுத் தவித்துக் கொண்டிருந்தார் அவர். அதனால் பெரும்பாலும் ப்ார்களிலேயே குடியிருந்தார் எனலாம்.

நிமிடங்கள் கடந்து கொண்டிருந்தன.

மருத்துவமனையை ஒட்டிய பகுதிகளில் விளக்குகள் எரியத் தொடங்கின.

எட்டு மணியானபோது தொலைபேசி மணியடித்தது.

டாக்டர் விஜயலட்சுமி பாய்ந்து சென்று ரிசீவரை எடுத்தார். இரண்டு நிமிடங்கள் பேசினார். உடனடியாக நர்ஸ் தங்கம்மாவை அழைத்தார். தங்கம்மா கெட்டிக்காரி. இருபத்தைந்து வருட கால நர்ஸ் வாழ்க்கை, ஏறத்தாழ அவளை ஒரு டாக்டராகவே மாற்றி விட்டிருந்தது.

எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பு படிக்காவிட்டாலும் தங்கம்மாவின் அனுபவம், ஒரு டாக்டருக்கு எந்த வகையிலும் குறைந்தல்ல.

குறிப்பாக பிரசவ கேஸ்களில் தங்கம்மாவின் யூகம் வெகு துல்லியமாக இருக்கும். மிகவும் சிக்கலான பிரசவ கேஸ்களின்



போது, தங்கம்மாதான் தங்களுக்கு உதவ வேண்டுமென்று பெரும்பாலான டாக்டர்கள் விரும்புவதும் உண்டு.

"என்னங்க டாக்டர்?" தங்கம்மா கேட்டாள்.

"நாம குறிப்பிட்டிருக்கிற நேரம் பத்து மணி. இப்ப மணி எட்டரைதான் ஆகுது. நான் அவசரமா குவார்ட்டர்ஸ் வரைக்கும் போயிட்டு வர்றேன். கொஞ்சம் கவனமா இருங்க!" டாக்டர் விஜயலட்சுமி சொன்னார்.

"ஐயோ...என்னங்க டாக்டர் நீங்க கிளம்பிட்டீங்கன்னா?" தங்கம்மா விழித்தாள்.

"பயப்படாதே... நீ என்ன ஆபரேஷனா செய்யப் போற? இன்னும் ஒண்ணரை மணி நேரமிருக்கு. நான் அதுக்குள்ள வந்து விடுவேன். பேஷண்ட் மேல ஒரு கண்ணு இருக்கட்டும். அதுக்குத்தான் சொல்றேன்!" என்ற விஜயலட்சுமி தனது மாருதி காரின் சாவியை எடுத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினார்.

நர்ஸ் தங்கம்மா டாக்டர் கண்ணிலிருந்து மறைவது வரை பார்த்திருந்துவிட்டு, ஆபரேஷன் தியேட்டரை நோக்கி நடந்தாள்.

சாராம்மா ஜேக்கப்பின் அருகிலேயே அமர்ந்தாள் தங்கம்மா.

நேரம் நகர்ந்தது.

மணி ஒன்பதரை.

ஆபரேஷன் தியேட்டருக்குள் திடுமென்று நர்ஸ் ஒருவர் வந்தார்.

"டாக்டர் உங்களைக் கூப்பிடுறாங்க!" வந்தவர் சொன்னார்.

உடனே தங்கம்மா எழுந்து வெளியே போனாள்.

சற்று நேரத்துக்குப் பிறகு ஆபரேஷன் தியேட்டருக்கு வந்த நர்ஸ் அங்கிருந்து விரைவாக வெளியேறினார். டாக்டர் விஜயலட்சுமியை அழைப்பதற்காக டூட்டி ரூமுக்கு வந்தார்.

"தங்கம்மா சிஸ்டர்....டாக்டரைச் சீக்கிரமா வரச் சொல்லுங்க. பேஷண்டோட நிலைமை ரொம்ப மோச மாயிருக்கு" வந்த நர்ஸ் குரல் கொடுத்தார்.

"ஐயோ டாக்டரம்மாவை இன்னும் காணோமே." என்று தவித்த தங்கம்மா டாக்டரின் வீட்டுக்கு போன் செய்தனர்.

டாக்டரின் வீட்டில் ரீசீவரை எடுத்தனர்.

"டாக்டர் சீக்கிரம் வாங்களேன். பேஷண்ட் நிலைமை கொஞ்சம் சீரீயஸ்...."

எதிர்முனையில் பதில்லை.

தங்கம்மா ரிசீவரை கிராடிலில் வைத்தார்.

குவார்ட்டர்ஸுக்குப் போய்விட்டு வருகிறேன் என்று சொன்ன டாக்டர் இன்னும் வீட்டுக்கே போகவில்லையா?

ஏன் அவரிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லை?

யோசித்துக் கொண்டிருக்கவோ, மாற்று ஏற்பாடுகளுக்கோ நேரமில்லை. தங்கம்மா உடனடியாக ஆபரேஷன் தியேட்டரை நோக்கி ஓடினாள்.

சாராம்மா, கட்டிலில் நெளிந்து புரண்டு துடித்துக் கொண்டிருந்தார்.

என்ன செய்வது என்று புரியாத தங்கம்மா, அறையை விட்டு வெளியே வந்து டாக்டர் ரீட்டா ஜானை நெருங்கினாள்.

"டாக்டர்... மன்னிக்கணும்! சாராம்மா ஜேக்கப்ங்கிற பேஷண்ட் கொஞ்சம் சிக்கலான நிலைமையில் இருக்காங்க. ஆபரேஷன் தேவைப்படும்னு தோணுது. ஆனா, ஆபரேஷன் செய்ய வேண்டிய டாக்டர் விஜயலட்சுமியைக் காணோம்."

"வருவாங்க... வராம இருப்பாங்களா?" ரீட்டா ஜான் இருக்கையிலிருந்து எழுந்தவாறே பேசினார்.

கடிகாரம் மணி பத்து என்று காட்டியது.



ஆனால், டாக்டர் விஜயலட்சுமி வரவே இல்லை.

அதற்கு மேல் காத்திருக்க விரும்பாத ரீட்டா ஜான் ஆபரேஷன் தியேட்டருக்குள் புகுந்தார்.

அங்கு அவர் கண்ட காட்சி எப்படிப்பட்டவரையும் திடுக்கிட வைக்கக்கூடியதாக இருந்தது. அந்த அளவுக்குப் பயங்கரமாக இருந்தது.

ஆபரேஷன் செய்ய வேண்டியயிருந்த நோயாளி சாராம்மா கட்டிலிலிருந்து எப்படியோ தவறிக் கீழே விழுந்து கிடந்தார். அதுவும் குப்புற விழுந்து கிடந்தார்

டாக்டரும், தங்கம்மாவும் சேர்ந்து சாராம்மாவைத் தூக்கிப் புரட்டி விட்டுக் கட்டிலில் படுக்க வைக்க நினைத்தனர்.

ஆனால், அந்த உடல் அசைவற்றுப் போயிருந்தது.

## 2

ஆபரேஷன் தியேட்டரும், அதை ஒட்டியிருந்த பகுதிகளும் திடுமென்று பரபரப்பின் உச்சத்துக்கே சென்றன.

புரபஸர் சாராம்மா ஜேக்கப் ஆபரேஷன் தியேட்டரில் மரணம் அடைந்திருந்தார்.

அது இயற்கையான மரணம் அல்ல. கண்டறிய முடியாத ஏதோ காரணத்தால் அதுவும் மிக மோசமான நிலையில்-இக்கட்டான சூழ்நிலையில்!

யாருக்கும் எதுவும் பேசத் தோன்றவில்லை. எல்லோரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனரே தவிர, வேறு என்ன சொல்ல?

ஒரு சில நிமிடங்களுக்குள் செய்தி, மருத்துவமனையின் எல்லா மூலைமுடுக்குகளுக்கும் எட்டியது.

இந்தச் செய்தி எப்படியோ பத்திரிகை அலுவலகங்களையும் எட்டியது. அதில் துறுதுறுப்பான ஒரு பத்திரிகையாளர் உடனடியாக மருத்துவமனைக்குள் நுழையவும் செய்தார். முடிந்த அளவு தகவல்களைச் சேகரித்தார்.

அதற்குள் ஜேக்கப் ஸ்டீபன் எங்கிருந்தோ பாய்ந்து வந்தார்.

அவர் ஆஸ்பத்திரியின் ஏதோ ஒரு பகுதியில் இருந்தார்.

தொலைபேசிகள் இடைவிடாமல் அலறின. மேலதிகாரிகள் பரபரப்புடன் செயல்பட்டனர்.

திடுமென்று நடைபெற்ற ஒரு விவாதத்தின் முடிவில் சாராம்மாவின் உடலை மார்ச்சுவரிக்குக் கொண்டு போனார்கள்.

அப்போது அங்கு சில கேள்விகள் தொக்கி நின்றன.

டாக்டர் விஜயலட்சுமி எங்கே?

அவர் எதற்காக அந்த நேரத்தில் குவார்ட்டர்ஸுக்கு போனார்?

அதன் பின்னணி என்ன?

இது போன்ற கேள்விகள் எதற்கும் பதில் கிடைக்காமல் மர்மமாகவே அந்தரத்தில் நின்றன. அதற்கடுத்த நாட்களின் காலை மற்றும் மாலைப் பத்திரிகைகளில் இந்தச் செய்தியே முக்கியத்துவம் பெற்றது.

வாசகர்களின் மூச்சுக் காற்றையே தாக்கும் அளவுக்கு வெவ்வேறு தலைப்புகளில் செய்தி வெளியானது.

'பொதுமக்களுக்கு நோயிலிருந்து நிவாரணம் அளிக்க வேண்டிய மருத்துவமனை, நம்பமுடியாத சம்பவங்களின் அணிவகுப்பு நடத்துகிறது.

ஆபரேஷன் தியேட்டருக்குள் கொண்டு செல்லப்பட்ட, கல்லூரிப் பேராசிரியர் மர்ம மரணம்.



நோயாளியை ஆபரேஷன் செய்ய வேண்டிய டாக்டர் மாயமான மர்மம் என்ன?

போஸ்ட் மார்ட்டத்தில் இரண்டு குழந்தைகளின் உடல்கள்?

அடுக்கடுக்காக மர்மங்கள் தொடர்கின்றன' - இவையெல்லாம் செய்திப்பத்திரிக்கைகள் எழுப்பிய கேள்விகளில் சில.

வழக்கு நடத்தும் பொறுப்பை கிரைம் பிராஞ்ச் போலீஸார் ஏற்றுக் கொண்டனர். கூடவே உள்ளூர் போலீஸாரும் ஒத்துழைக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விசாரணையில் எந்த ஓரிடத்திலும், எந்த விதமான தவறும் ஏற்படக்கூடாது என்று உயரதிகாரி அழுத்தமாக எச்சரித்திருந்தார்.

அதன் பிறகு ஆபரேஷன் என்று சொன்னாலே, ஆபரேஷனுக்கு உள்ளான நோயாளிகளின் நெஞ்சுத் துடிப்பு அதிகரிக்கத் தொடங்கியது.

எத்தனையோ விதமான காரணங்களாலும் சூழ்நிலைகளாலும் ஆபரேஷன் தியேட்டருக்குள் அதுவரை மரணங்கள் நிகழ்ந்திருந்தாலும் பயங்கரக் கொலை என்று குறிப்பிடத்தக்க அளவில் நடந்தது இது ஒன்றுதான்.

எனவே பத்திரிகைகள் இந்தச் சம்பவம் தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தன.

இரவு மணி எட்டு.

கிரைம் பிராஞ் எஸ்.பி.யான டோமி அலெக்ஸும் அவரது நெருங்கிய நண்பரும் புகழ் பெற்ற வழக்கறிஞருமான ஷாகுல் ஹமீதும் சூபரின்டெண்டெண்ட் அலுவலகத்தில் சந்தித்துக் கொண்டனர்.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர்கள் வந்து விடுவார்கள்." டோமி அலெக்ஸ் சுட்டிக்காட்டினார்.

சரியாக அதே நேரத்தில் ஹாஃப் டோர் எனப்படும் அரைக் கதவைத் திறந்துகொண்டு பத்திரிகையாளரான அசோகன் அந்த அறைக்குள் நுழைந்தார்.

எஸ்.பி- க்கு முன்புறமிருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்தார் அசோகன்.

மேலும் ஒரு நாற்காலி அங்கு காலியாகக் கிடந்தது.

"அவரும் வந்து விடுகிற நேரம்தான்!" தனது வாட்ச்சைப் பார்த்துவிட்டு ஹாஃப்டோரின் பக்கமாகத் திரும்பியதும் டிட்டெக்டிவ் புஷ்பராஜின் தலை தட்டுப்பட்டதும் ஒரே விநாடியில் நிகழ்ந்தன.

"ஹலோ..."

"ஹலோ"

பிரபல துப்பறிவாளர் புஷ்பராஜ் காலியான இருக்கையில் அமர்ந்தார்.

சிக்கலான எத்தனையோ வழக்குகளில் மர்மங்களை மிகச் சுலபமாக அவிழ்த்தெறிந்திருக்கிற புஷ்பராஜ் இப்போது பெங்களூரிலிருந்து நேராக வருகிறார். இவ்வளவு இள வயதுக்குள்ளாகவே நூற்றுக்கு மேற்பட்ட வழக்குகளில் ஈடுபட்டு உண்மையான குற்றவாளிகளை வெளிக்கொண்டு வரவும் அவரால் முடிந்திருக்கிறது.

அவர் ஒரு வழக்கை ஏற்றுக்கொண்டார் என்றால் கண்டிப்பாக அந்த வழக்கு வெற்றிகரமாகத் துப்புத்துலக்கிக் கண்டுபிடிக்கப்பட்டதாகத்தான் பொருள். சரியான உயரத்துடன், அதற்கேற்ற கட்டுடலுடனும் தோற்றமளிக்கும் புஷ்பராஜ் ஒரு ஜிம்னாடிக்ஸ்டிக் பேர்வழியும் கூட.

ஆயுதம் எதுவுமில்லாமல் ஐந்து மனிதர்களைச் சுலபமாகக் கையாளக்கூடிய 'கறுப்பு பூனை' பயிற்சியும் பெற்றவர்.



"சரி நாம் விஷயத்துக்கு வரலாமில்லையா?" எஸ். பி. டோமி அலெக்ஸ் தொடக்கமிட்டார்.

"மிஸ்டர் அசோகன்... இதுவரை உங்களுக்குக் கிடைத் திருக்கிற அதிகப்படியான தகவல்கள் என்னென்னவென்று முதலில் சொல்லுங்கள். நாம் அதிலிருந்தே ஆரம்பிக்கலாம்!". புஷ்பராஜ் கூறினார்.

அசோகன் முப்பத்திரண்டு வயதான, வாட்டசாட்டமான இளைஞர். பழகுவதற்கு இனிமையானவர். ஒரு தேர்ந்த போட்டோ கிராபரும்கூட.

அசோகன், தான் கொண்டு வந்திருந்த பிரீஃப்கேஸைத் திறந்து மடியில் வைத்துக் கொண்டார். சாராம்மா ஜேக்கப் மரணமடைந்தது முதல் வெளியான வெவ்வேறு பத்திரிகை களின் வெவ்வேறு கோணத்திலான செய்திகள் அதில் இருந்தன. அவற்றை வெளியில் எடுத்தார். அத்துடன் புகைப்படங்கள் சிலவும் இருந்தன.

"இது நானே எடுத்த படம்" என்ற அசோகன் ஒரு வெண்மையான உறையிலிருந்து சில புகைப்படங்களை எடுத்துப் பார்த்துவிட்டு அதில் குறிப்பிட்ட ஒன்றை மட்டும் டேபிளின் மீது வைத்தார்.

சாராம்மா. ஜேக்கப் ஆபரேஷன் தியேட்டரின் தரையில் குப்புறவிழுந்து கிடக்கும் படம் அது.

"இதை எப்படி எடுத்தீங்க அசோகன்?" புஷ்பராஜ் கேட்டார்.

"மருத்துவமனையைச் சேர்ந்தவர்கள் போலீஸுக்குத் தகவல் தெரிவித்தனர். அவர்களுடன் நானும் மருத்துவ மனைக்குள் நுழைந்தேன். அப்போது எடுத்த படங்கள்தான் இவை."

"நல்ல வேலை செஞ்சீங்க!" என்ற புஷ்பராஜ் அந்த உறைக்குள் இருந்த மற்ற புகைப்படங்களையும் பார்வையிட்டார்.

குறிப்பிட்ட ஒரு படத்தை எடுத்த புஷ்பராஜ் சற்று நேரம் அதை ஊன்றிப் பார்த்தார்.

"இந்த முகத்தின் குளோசப் படம்... கொஞ்சம் சந்தேகத் துக்குரியதாக இருக்கிறது. முகம் ரொம்பவும் அமைதியா இருக்கு. பிரசவ வேதனையை அனுபவிக்கிற ஒரு பெண் மணியோட முகமாத் தெரியலை. சாதாரணமாக முகத்தின் தசைப்பகுதிகள் இறுக்கிப் பிடித்திருக்கும். கூடவே ஒரு நிம்மதியற்ற தன்னையும் தெரியும்... அதெல்லாமே இதுல மிஸ்ஸிங்!" என்று குறிப்பிட்ட புஷ்பராஜ், போட்டோவை அலெக்ஸிடம் திரும்பக் கொடுத்தார்.

அவரும் அதை வாங்கிக் கவனமாகப் பார்த்தார். அவரது முகத்திலும் சந்தேக ரேகைகள் படர்ந்தன.

"இது திடுமென்று நிகழ்ந்த, எதிர்பாராத மரணம். அப்படியானால் சட்டென்று மரணம் சம்பவிக்கக்கூடிய ஏதோ ஒண்ணு இந்த உடம்பைத் தாக்கியிருக்கணும்."

"அப்படித்தான் இருக்கணும். அதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது!" புஷ்பராஜ் ஆமோதித்தார்.

"போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் வந்த பிறகுதான் மேற்கொண்டு செயல்பட முடியும்!" டோமி அலெக்ஸ் தனக்குத் தானே பேசிக் கொண்டார்.

வேறு சில புகைப்படங்களையும் பார்வையிட்ட அவர்கள் பத்திரிகைச் செய்திகளின் பக்கமாகக் கவனம் செலுத்தினர்.

"இதுல நமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய விஷயம் டாக்டர் விஜயலட்சுமியோடது. டூட்டிக்கு நடுவில் எதற்காக அவர் வீட்டுக்குப் போனார்? அங்கிருந்து ஒரு போன் வந்தவுடன் தான் டாக்டர் புறப்பட்டதாக தங்கம்மா சொல்கிறார். நாம் ஒரு தடவை டாக்டரின் வீடு வரை போய்விட்டு வந்தால் என்ன?" புஷ்பராஜ் கேட்டார்.

"தாராளமாக! அதுக்கு நீங்க மட்டும் போனாப் போதும். அங்க டாக்டரோட அத்தைதான் இருக்காங்க. அவங்கதான் விஜயலட்சுமியை வளர்த்துப் படிக்க வெச்சவங்க. டாக்டரோட



அம்மா, சின்னவயசுலேயே இறந்துட்டாங்க. ரெண்டாவது கல்யாணம் பண்ணிட்ட அப்பா சிங்கப்பூர்ல செட்டிலாயிட்டார். இப்பவும் அவர் அங்கதான் இருக்கார்னு தோணுது!" டோமி அலெக்ஸ் குறிப்பிட்டார்.

"அப்ப நான் போயிட்டு வந்துடுறேன்!" புஷ்பராஜ் எழுந்தார்.

டிட்டெக்டிவ் புஷ்பராஜின் மாருதி கார் காம்பௌண்ட் கேட்டைக் கடந்து வெளியேறியது.

டாக்டர்கள் குடியிருக்கும் குவார்ட்டர்ஸுக்குள் பயணம் செய்த வெள்ளை நிற மாருதி காரை யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் அங்கிருந்த பெரும்பாலான டாக்டர்களும் பயன்படுத்தியது வெள்ளை மாருதிதான்.

டாக்டர் விஜயலட்சுமியின் பிளாக்குக்கு முந்தைய பிளாக்கில் மாமரத்தின் கீழ் புஷ்பராஜ் காரை நிறுத்தினார். தப்பித்தவறி யாராவது கவனித்தால்கூட, அதற்கு முன்னாலுள்ள டாக்டர் விஜயகுமாரி வீட்டுக்கு யாரோ வந்திருப்பதாக நினைத்துக் கொள்ளட்டும் என்றுதான் அவர் அப்படிச் செய்தார்.

புஷ்பராஜ், விஜயலட்சுமியின் வீட்டுக்கு முன்னாலுள்ள கேட்டை நெருங்கினார். நல்லவேளையாக கேட், பூட்டப் பட்டிருக்கவில்லை.

கேட்டை கடந்தவர், வாசலுக்கு அருகிலுள்ள காலிங் பெல் சுவிட்சில் விரலை வைத்து அழுத்தினார்.

சற்று நேரத்துக்குள் நடுவயதுப் பெண்மணி ஒருவர் கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்டார்.

"விஜி....வீட்டுல இல்லையே!" அறிமுகமில்லாதவர்களிடம் பேச விரும்பாததை வெளிக்காட்டும் குரலில் பேசினார்.

"அதைத் தெரிஞ்சுட்டுதான் வந்திருக்கிறேன்." புஷ்பராஜ் பதில் அளித்தார்.

மேற்கொண்டு அவரிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் மௌனமானார் அந்தப் பெண்மணி!

## 3

சந்தேகம் நிரம்பிய கண்களுடன் அந்தப் பெண்மணி புஷ்பராஜின் முகத்தையே ஊன்றிக் கவனித்தார்.

"நீங்க வந்திருக்கிற நோக்கம் புரியலையே..." அந்தப் பெண்மணி வார்த்தைகளை முடிக்காமல் நிறுத்தினார்.

"விளக்கமாகச் சொல்றேன்..." என்ற புஷ்பராஜ் வீட்டுக்குள் நுழைய முயன்றார்.

"நான் எதையும் தெரிஞ்சுக்க விரும்பலை..." அந்தப் பெண்மணி அவரை வீட்டுக்குள் நுழைய விட விரும்பாதவரைப் போல் வாசலிலிருந்து நகராமல் இருந்தார்.

"நீங்க இப்படியெல்லாம் சொன்னா, எங்களுக்குத் தேவையான தகவல்களைத் தரலேன்னா ஒரு வேளை டாக்டர் விஜயலட்சுமி மேல கொலைக்குற்றம் கூட சுமத்தப்படலாம்." புஷ்பராஜ் கூறினார்.

"என்ன சொல்றீங்க? என் மருமகள் கொலைகாரியா யிடுவாளா?" திகைப்பு அடைந்த பெண்மணி வழிவிட்டு ஓர் ஓரமாக நின்றார்.

முன்னறைக்குள் நுழைந்த புஷ்பராஜ் எதிரில் தென்பட்ட சோபாவில் உட்கார்ந்தார்.

அறைக்குள் இருந்த பொருள்கள் ஒழுங்காகவும் அழகாகவும் சுத்தமாகவும் பராமரிக்கப்பட்டிருந்தன. மிகவும் பெரிய அறையென்று சொல்லமுடியாத அதில் ஒரு சில ஃபர்னிச்சர்களுடன் டி.வி, வி.சி.ஆர், டெலிபோன் என்று சில பொருட்கள் இருந்தன.



ஒரு சில விநாடிகளுக்குப் பிறகு அந்தப் பெண்மணி புஷ்பராஜுக்கு எதிர்ப்புறமிருந்த சிங்கிள் சோபாவில் அமர்ந்தார்.

"உங்க பேர் பாகீரதியம்மாதானே?" புஷ்பராஜ் கேட்டார்.

"ஆமாம்!" வியப்பை மறைக்கமாட்டாதவராக ஒப்புக் கொண்டார்.

"நான் சில தகவல்கள் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. நீங்க எரிச்சலடையக் கூடாது. வெளிப்படையாகவே பேசுகிறேன். நான் ஒரு போலீஸ் ஆபீஸர்." புஷ்பராஜ் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"போலீஸ் ஆபீஸருங்களா? நீங்க வந்து விசாரிக்கிற அளவுக்கு இப்ப இங்க என்ன நடந்துருச்சு? நானும் விஜயலட்சுமியும் ஒரு தப்பும் செய்யாத அப்பாவிங்க." அந்தப் பெண்மணி பரபரப்பு அடைந்தவராகத் தென்பட்டார்.

"நீங்க குற்றம் புரிந்ததா நான் சொல்லலையே? ஆனால், டாக்டர் விஜயலட்சுமியின் நடவடிக்கைகளால் ஒரு மரணம் நிகழ்ந்திருக்கு." புஷ்பராஜ் அங்கிருந்த சுவரில் மாட்டியிருந்த ஒரு படத்தைப் பார்த்தபடி பேசினார்.

மாலை அணிவித்திருக்கும் அந்தப் புகைப்படத்தில் இருப்பவர்தான் டாக்டர் விஜயலட்சுமியின் அம்மாவாக இருக்க வேண்டும் என்று புஷ்பராஜ் யூகித்தார்.

"அவங்கதான் விஜயலட்சுமியோட அம்மா!" புஷ்பராஜின் பார்வையைக் கவனித்த பாகீரதியம்மா கூறினார்.

"அப்படித்தான் இருக்கணும்னு நெனைச்சேன். ஏறத்தாழ இதே மாதிரிதான் இருப்பாங்க இல்லையா டாக்டர் விஜய லட்சுமியும்?"

"ஆமாம்... அச்சு அசலாக இதே உருவம்தான்!" வருத்தம் தோய்ந்த குரலில் பேசினார் பாகீரதியம்மா.

"நான் வந்த விஷயத்தை இன்னும் சொல்லலையே?" பாகீரதியம்மா, தன்னுடன் பேசத் தயாராகி விட்டார் என்பதை உணர்ந்த புஷ்பராஜ் பேச்சைத் தொடங்கினார்.

"என்ன வேணுமோ கேளுங்க!" அவர் பதில் சொல்லத் தயாரானார்.

"இரண்டு நாளுக்கு முன்னால ஆஸ்பத்திரியில சாராம்மா ஜேக்கப் இறந்து போனது உங்களுக்கும் தெரிஞ்சிருக்கணும். அது தொடர்பா உங்களுக்கு ஏதாவது தகவல் தெரியுமா?"

"நானும் கேள்விப்பட்டேன். அதுக்கு மேல அதைப் பத்தி எனக்கு எதுவுமே தெரியாது!"

"அந்த சம்பவத்துக்குப் பிறகு டாக்டர் விஜயலட்சுமியைப் பத்தி ஏதாவது கேள்விப்பட்டீங்களா?" புஷ்பராஜ் கேட்டார்.

"உண்மையைச் சொல்றேனே... எனக்கு என்ன பண்றதுன்னே புரியலை.... நான் பித்துப் பிடிச்சாப்புல இருக்கேன். விஜயலட்சுமி எங்கே போனாள், என்ன ஆனாள்னு எதுவுமே தெரியலே. சத்தியமா இதுதான் உண்மை!"

"இறந்து போனவங்க உங்க மருமகளோட நெருங்கிய சிநேகிதி. சாராம்மான்னு பேர். காலேஜ் புரபஸர். உங்களுக்கு அவங்களைப் பத்தி வேற ஏதாவது தகவல் தெரியுமா?"

"அவங்களை எனக்குத் தெரியும். இங்கே அடிக்கடி வந்திருக்காங்க. பழகியிருக்கேன். பேசியிருக்கேன்."

"அன்னிக்கு மட்டும் திட்டமிட்டபடி ஆபரேஷன் நடந்திருந்தா அவங்க இறந்திருக்கமாட்டாங்க."

"அப்புறம் ஏன் ஆபரேஷன் நடக்கலை?" பாகீரதியம்மா கேட்டார்.

"அதுதான் எங்களுக்கும் புரியாத விஷயம். ஆபரேஷன் நடக்கிறதுக்கு சுமார் ஒரு மணி நேரத்துக்கு முன்னால வீட்டுலேருந்து அதாவது இங்கேயிருந்து போன் வந்தாச் சொன்னாங்க அவங்களுக்கு போன் பண்ணினது யார்?"



"இங்கேயிருந்தா? நான் மட்டும்தானே இருக்கேன். நான் கூப்பிடலையே?"

"அப்படியானா அவங்க அன்னிக்கு வீட்டுக்கு வரலையா?"

"அன்னிக்கு டூட்டிக்குப் போன பிறகு அவளைப் பத்தி எந்தத் தகவலும் எனக்குத் தெரியாதே!"

"அப்படியானா, அவங்க எங்கேயெல்லாம் போயிருக்க முடியும்னு, உங்களுக்குத் தெரிஞ்ச வரைக்கும் சொல்ல முடியுமா?" புஷ்பராஜ் கேட்டார்.

"அப்படி விஜி போற மாதிரி எனக்குத் தெரிஞ்சு எந்த இடமும் கிடையாது. அப்படியே போறதா இருந்தாலும் அது சாராம்மாவோட வீடுதான்" பாகீரதியம்மா உறுதியான குரலில் பேசினார்.

"தொல்லை கொடுத்ததுக்கு மன்னிக்கணும். இப்பக் கிளம்புறேன். நான் மறுபடியும் வர வேண்டியிருக்கலாம். இல்லேன்னா போன் பண்றேன். தகவல்கள் ஏதாவது தெரிஞ்சா, அதை பரஸ்பரம் பரிமாறிக்கிறது நம்ம ரெண்டு பக்கத்து ஆளுங்களுக்கும் நல்லது." புஷ்பராஜ் அங்கிருந்து எழுந்தார்.

புஷ்பராஜ் திரும்பவும் எஸ்.பி-யின் அலுவலகத்துக்கு வந்தார்.

மற்ற மூவரும் அங்கு இருந்தனர். பாகீரதியம்மா தெரிவித்த விஷயங்களை புஷ்பராஜ், அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

"வீட்டிலிருந்து டியூடிக்கு வந்த டாக்டர் அதன் பிறகு வீட்டுக்குப் போகவில்லையென்றால், வேறு எங்குதான் போயிருக்கமுடியும்?" எஸ்.பி. டோமி பால்பாயிண்ட் பேனாவின் மறுமுனையை மூக்கில் உரசியபடி கேட்டார்.

"அதைத் தெரிந்துகொண்டால் ஏதாவது ஒரு பிடி கிடைக்கும் என்று தோன்றுகிறது!" என்ற புஷ்பராஜ் வழக்கறிஞர் ஷாகுல் ஹமீதைப் பார்த்தார்.

அதுவரை எதுவும் பேசாமல் மற்றவர்கள் சொல்வதை மட்டுமே ஊன்றுக் கவனித்துக்கொண்டிருந்தார் ஷாகுல் ஹமீது.

"நம்முடைய விசாரணையை வேறொரு கோணத்தில் திருப்பி விட்டால் என்ன?" ஷாகுல் ஹமீது, புஷ்பராஜைப் பார்த்தார்.

"எப்படி?" புஷ்பராஜ் கேட்டார்.

எல்லோரும் வழக்கறிஞரின் முகத்தையே ஆவலுடன் பார்த்தனர்.

"சாராம்மா ஜேக்கப்புக்கு குறிப்பிடத்தக்க எதிரிகள் யாராவது இருக்கிறார்களா என்று விசாரிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவரது கணவர் ஜேக்கப்புக்கு எதிரிகள் இருக்கிறார்களா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்."

ஷாகுல் ஹமீதின் யோசனை, அதுவரையிலான குழப்பமான சூழ்நிலையில் ஒரு திருப்பு முனையாகவே இருந்தது என்று சொல்லலாம்.

"அப்படி யாராவது இருந்தால், அவர்களே டாக்டர் விஜயலட்சுமிக்கும் எதிரிகளாக இருக்கலாம்." எஸ்.பி. சுட்டிக் காட்டினார்.

"யோசித்துப் பார்த்தால் இந்த வழக்கில் இப்படிப்பட்ட விஷயத்துக்கு நாம் முன்னுரிமை கொடுத்தால் நல்லதென்று தோன்றுகிறது!" புஷ்பராஜ் எஸ்.பி -யின் கருத்தை ஆமோதித்தார்.

அப்போது கான்ஸ்டபிள் ஒருவர் அறைக்கதவை லேசாகத் தட்டி விட்டு, அறைக்குள் நுழைந்து ஃபைல் ஒன்றை வைத்தார்.

"போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வந்து விட்டது" என்ற எஸ்.பி. டோமி அதைப் பிரித்தெடுத்தார்.

"இது ஏன் இவ்வளவு லேட் ஆச்சு?" புஷ்பராஜ் கேட்டார்.



23383

"அதுக்கும் ஒரு காரணம் இருக்கு. முதல்ல போஸ்ட் மார்ட்டம் நடத்தினவர் டாக்டர் ரமணன். அதில் தனக்குத் திருப்தி இல்லையென்றும் மறுபிரேதப் பரிசோதனை நடத்த வேண்டும் என்றும் டி.ஐ.ஜி அருணாசலம் கேட்டுக்கொண்டார். மறுமுறை போஸ்ட் மார்ட்டம் நடத்தியவர் டாக்டர் முரளிதரன். அதனால்தான் தாமதமாகியிருக்கிறது. பின்னால் ஏதும் காம்பிளிகேஷன் ஆகிவிடவேண்டாம் என்றுதான் இந்த ஏற்பாடு!" டோமி அலெக்ஸ் விவரித்தார்.

புஷ்பராஜ் பி.எம். ரிப்போர்ட்டின் தாள்களைப் புரட்டினார். மிகவும் நிதானமாக வரிகளின் மீது கண்களை ஓட்டினார். அப்போது அவர் முகத்தில் பல்வேறு வகையான உணர்வுகள் அலைமோதுவதை டோமி அலெக்ஸ் கவனிக்கத் தவறவில்லை.

ஏறத்தாழ முப்பது நிமிடங்கள் அந்த அறை மௌனமாக இருந்தது. யாரும் எதையும் பேசிக் கொள்ளவில்லை. பரஸ்பரம் பார்த்துக் கொண்டதுடன் புஷ்பராஜையும் கவனித்தனர்.

சில வரிகளின் மீது புஷ்பராஜின் பார்வை மீண்டும் படிந்தது.

"குறிப்பிட்டுச் சொல்ற மாதிரி ஏதாவது இருக்குங்களா?" எஸ்.பி. அமைதியைக் குலைத்தபடி கேட்டார்.

"நம்ம யாருமே எதிர்பார்க்காதது. அதே நேரம் இன்னிக்கு வரையில எங்கேயும் நடக்காதது - இன்னும் சொல்லப் போனா ரொம்பவும் பைசாசிகமானதும்கூட" புஷ்பராஜ் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துப் புகையைக் கக்கியபடி பேசினார்.

"என்ன செய்யலாம்?" ரிப்போர்ட் ஃபைலை வாங்கிய எஸ்.பி. அதைப் புரட்டியபடி கேட்டார்.

"இங்கே நாம நாலு பேர் இருக்கோம். நம்ம எல்லோரோட நோக்கமும் ஒண்ணுதான். நாம ஆளுக்கு ஒரு வழியில போனோம்னா பலன் இருக்கும்னு தோணுது." புஷ்பராஜ் சொன்னார்.

"நான் என்ன பண்ணணும்னு சொல்லுங்க?" ரிப்போர்ட்டரும் போட்டோகிராபருமான அசோகன் கேட்டார்.

கோவை மாவட்ட

"நீங்க உங்களோட பத்திரிகையில இதைப் பத்தி பிரத்தியேகமான ரிப்போர்ட்டுகள் பண்ணணும். ஆனால், அதன் மூலம் உண்மையான குற்றவாளிகள் தப்பிக்க முடியாதபடியும் செய்யணும்!"

"செஞ்சுட்டாப் போகுது. யாரைப் பத்தியெல்லாம் நான் விசாரிச்சு எழுதணுங்கிறதையும் ஓரளவுக்குக் கோடி காட்டுங்க. சில சமயம் படங்களோட அதையெல்லாம் வெளியிட முடிஞ்சாலும் செய்யுறேன். தொடர்ந்து அவங்களைக் கண்காணிக்கவும் செய்யுறேன்."

"ரொம்ப நல்லது. நீங்க இந்த அளவுக்குச் செஞ்சால் போதும். ரொம்பவும் எச்சரிக்கையா இருக்கணும். என்னோட பார்வையில இந்த கேஸில ஈடுபட்டுள்ள குற்றவாளி அசாதாரண மானவர்னு தோணுது." புஷ்பராஜின் கையில் அப்போதும் பி.எம். ரிப்போர்ட்டின் சில பகுதிகள் இருந்தன.

ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருந்த சில விவரங்கள் எப்படிப்பட்ட வரையும் திடுக்கிட வைக்கக் கூடியதாக இருந்தன.

இயற்கையான பிரசவத்துக்கு வழியே இல்லை. கருப் பையில் இரண்டு குழந்தைகள் இருந்தன. அரைமணி நேரத்துக்கு முன்னதாக ஆபரேஷன் நடந்திருந்தால்கூட அந்த மூன்று உயிர்களையும் ஒட்டுமொத்தமாகக் காப்பாற்றியிருக்கலாம்.

உடலுக்குள் விஷம் செலுத்தப்பட்டதால்தான் மரணம் நிகழ்ந்துள்ளது என்று உடனடியாகச் சொல்லலாம்.

மேலும் அது தொடர்பான விவரங்களை லாபரெட்டரி, ரிப்போர்ட் வந்த பிறகுதான் தீர்மானிக்க முடியும்.

"அப்பா பயங்கரமான தகவல்கள்!" புஷ்பராஜ் மெதுவான குரலில் பேசினார்.

"அப்படியானால் இதன் பின்னணியில் யாரோ சிலர் மிகவும் மோசமான முறையில் செயல்பட்டிருப்பது போல்



தெரிகிறது." டோமி அலெக்ஸ் நெடுநேர யோசனைக்குப் பிறகு பேசினார்.

"டாக்டர் விஜயலட்சுமி காணாமல் போகவில்லை, கடத்தப்பட்டார். கடத்தப்பட்டதுகூட ஆபரேஷன் நடக்காமல் இருப்பதற்குத்தான்: எந்தக் காரணத்தாலும் சாராம்மா உயிரோட இருக்கக் கூடாதுன்னு எதிராளி நினைச்சிருக்கணும்!" புஷ்பராஜ் கூறினார்.

"அப்படியானால் நம்மளோட நடவடிக்கைகள்ல வழக்கத்தைவிட அதிகமான எச்சரிக்கை தேவைப்படுது இல்லைங்களா?" என்ற டோமி அலெக்ஸ், புஷ்பராஜைப் பார்த்தார்.

"ஆமாம். அதனாலே நம்ம பத்திரிகையாளர் தோழரே முதல் காலடி எடுத்து வைக்கட்டும்" என்ற புஷ்பராஜ் தன்னிடம் இருந்த ரிப்போர்ட்டின் மீதி பேப்பர்களை டோமி பக்கமாகத் தள்ளிவிட்டார்.

"ஒரு கோடு காட்டினீங்கன்னா நான் ஃபாலோ பண்றதுக்கு வசதியா இருக்கும்!" என்றார் அசோகன்.

"சாராம்மாவின் மரணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் டாக்டர் விஜயலட்சுமியின் தலைமறைவையும் அவர்களைக் கண்டுபிடிக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுப்பதாகவும் ஏறத்தாழ போலீஸ் டாக்டர் விஜயலட்சுமி ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தை நெருங்கி விட்டதாகவும், மிக விரைவில் அவர் மக்கள் முன் கொண்டுவந்து நிறுத்தப்படுவார் என்றும் நீங்கள் குறிப்பிடலாம். அநேகமாக உங்கள் பத்திரிகை மட்டுமே இது போன்ற எக்ஸ்குளூசிவ் தகவலை கொடுத்ததாக இருக்கும்" புஷ்பராஜ் யோசனை கூறினார்.

"இந்தத் தகவல்களே தாராளம்! இதை வெச்சு நம்புற மாதிரியாவே நிறையச் சொல்ல முடியும். மிச்சத்தை நான் பார்த்துக்கிறேன் சார்." அசோகன் ஒப்புக்கொண்டார்.

"மறுநாள் நீங்க கொடுக்க வேண்டிய செய்தி, குற்றவாளி இப்போது போலீஸின் கண்காணிப்பில்!" புஷ்பராஜ் விஷயத்தை விளக்கினார்.

"ரொம்ப நல்ல யோசனை!" எஸ். பி. டோமி அலெக்ஸ் புஷ்பராஜைப் பாராட்டினார்.

அத்துடன் ஒவ்வொருவராகக் கலையத் தொடங்கினர்.

அறையிலிருந்து வெளியே வந்த புஷ்பராஜ் யதேச்சையாக ஒரு காட்சியைக் கண்டார்.

அந்த அலுவலகக் கட்டத்தின் முன்புறமிருந்த மாமரத்தின் கீழ்ப்பகுதியிலிருந்து யாரோ ஒரு மனிதன் மிகவும் விரைவாக நடந்து அல்லது ஓடி சற்றுத் தொலைவிலிருக்கும் மோட்டார் பைக்கை நெருங்கிக் கொண்டிருந்தான்.

## 4

புஷ்பராஜ் பார்த்துக் கொண்டிருந்தார். எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்தது.

அந்த மனிதன் பைக்கை நெருங்குவதற்கு முன்பே அது ஸ்டார்ட் ஆகி தயாராக இருந்தது. விரைந்தவர் பைக்கில் ஏறியதும், அது அம்பு போல் சீறிப் பாய்ந்து விரைந்தது. பார்வையிலிருந்து மறையும் நேரத்தில்தான் அதன் விளக்குகள் எரியத் தொடங்கின.

"நம்ம பாராக்காரரை நான் அவசர வேலையா வெளியே அனுப்பினது தப்புன்னு தோணுது. ச்சே!" புஷ்பராஜைப் பின்தொடர்ந்து வெளிவந்த எஸ்.பி கூறினார்.

"இல்லை. அதுவும் நல்லதுக்குத்தான். யதார்த்தமா அப்படி நடந்ததாலதான் நமக்கு இப்படியொரு சஸ்பென்ஸ் கிடைச்சிருக்கு. சென்ட்ரி வெளியில பாரா இருந்தா, இப்படியொரு சம்பவத்துக்கு வாய்ப்பே இருந்திருக்காது" புஷ்பராஜ் கூறினார்.



"ஓகே நாம நாளைக்குச் சந்திப்போம். எப்போங்கிற தகவலை உங்களுக்குத் தெரியப்படுத்தறேன். " எஸ்.பி விடை கொடுத்தார்.

"இடத்தையும் அப்பத் தீர்மானிக்கலாம்!" புஷ்பராஜ் விடை பெற்றார்.

புஷ்பராஜ் வந்து சேர்ந்த இடம் டாக்டர் கேசவின் பங்களாதான். புஷ்பராஜின் நெருங்கிய நண்பர் அவர். அவரது மனைவியும் ஒரு டாக்டர்தான்.

மருத்துவத்துறை தொடர்பான தனது சந்தேகங்களை புஷ்பராஜ் நிவர்த்தி செய்து கொள்வது இந்தத் தம்பதியிடம்தான்.

இயல்புக்கு மீறிய திறமையும் மேலும் மேலும் அறிவைப் பெருக்குவதில் ஆர்வமும் உள்ள நபர் டாக்டர் கேசவ். அதே போல் கார் ஓட்டுவதில் இந்திரஜாலம் புரியக் கூடியவர்.

டாக்டரின் மனைவி மற்றும் குழந்தைகள் உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்தனர். அதுவும் புஷ்பராஜுக்கு நல்லதுக்கென்றே தோன்றியது. டாக்டரிடம் வெளிப்படையாகப் பேச ஒரு வாய்ப்பு. சாராம்மா ஜேக்கப்பின் மரணம் தொடர்பாக விவரம் கூறி, டாக்டரின் கருத்தை அறிவது புஷ்பராஜின் நோக்கம்.

மணி பத்து ஆகியிருந்தது.

இரவு ஒன்பதரை வரை டாக்டர் பிஸியாக இருப்பார். இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் மட்டுமே டாக்டரிடம் ஃப்ரீயாகப் பேசவும் முடியும்.

கார் கேட்டைத் தாண்டியதுமே கவனித்த டாக்டர், விருந்தாளி யாரென்பதை உணர்ந்து வாசற் கதவைத் திறந்தார்.

"நீங்க வருவீங்கன்னு எதிர்பார்த்தேன்" டாக்டர் வரவேற்றார்.

"எதிர்பார்த்ததை விட கொஞ்சம் லேட்டாகிடுச்சு" புஷ்பராஜ் காரை ஓரமாக ஒதுக்கிவிட்டு கேட்டை மூடிவிட்டு வந்தார்.

இருவரும் வரவேற்பு அறைக்கு வந்தனர்.

விசாலமான அந்த வரவேற்பு அறையின் ஜன்னல்கள் வெளிப்புறக் காட்சிகளை முழுமையாக ரசிப்பதற்கு ஏற்றவாறு பெரிதாக அமைக்கப்பட்டிருந்தன.

அங்கிருந்து பார்த்தால் கேட்டும் காம்பௌண்டின் மறுபுறமும் தெளிவாகத் தெரிந்தன. அதனால் வாசல் வழியாக யார் வந்தாலும் பார்வைக்குத் தெரியும்.

இருவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டனர்.

"யாருமே எதிர்பார்க்காத ஒரு சம்பவமில்லையா சாராம்மாவோட மரணம்?" புஷ்பராஜ் பேச்சைத் தொடங்கினார்.

"மட்டுமில்லை... ஒருபோதும் நடக்கக் கூடாத விஷயமும் கூட!" டாக்டர் தொடர்ந்தார்.

"உங்களோட அபிப்பிராயத்தைத் தோழமையோட தெரிஞ்சுக்க விரும்புகிறேன்" டாக்டரைப் பார்த்தபடி பேசினார் புஷ்பராஜ்.

டாக்டர் சற்று நேரம் மௌனமாக இருந்தார். பேசுவதற்கான விஷயங்களை அவர் மனசுக்குள் தேடுவது போலிருந்தது அந்த மௌனம்.

"முதல் விஷயம் அது என்னோட விங்க் இல்லை ரெண்டாவது ஊர்ஜிதமான தகவல்கள்னு எதையும் சொல்ல முடியாது. காத்துல வந்து காதுல விழுந்த தகவல்கள்தான். எனக்குத் தெரிஞ்சு யாரோ புத்திசாலித்தனமா திட்டமிட்டுக் கச்சிதமா நடத்துன ஒரு வேலையாத்தான் தெரியுது. ஆனால், இதுல டாக்டர்களுக்கோ, நர்ஸுக்கோ எந்தவிதமான தொடர்பும் இருக்கிறதா எனக்குத் தோணலை. என்னால அப்படி நம்பவும் யலை."



"உங்க கோணப்படி பார்த்தால்கூட ஆபரேஷன் தியேட்டர்ல தானே சம்பவம் நடந்திருக்கு?"

"அதனால....."

"யாருக்கும் தெரியாம நடக்க முடியுமா?"

"யூ ஸீ மிஸ்டர் புஷ்பராஜ்...இதெல்லாம் ரொம்பவும் சாதாரணமான விஷயம். பெரிய அளவுக்குத் திட்டம் போட முடியுற ஒருத்தரால, சூழ்நிலைக்கு ஏற்ற மாதிரி வேஷம் போடுறதுங்கிறது முடியாத விஷயமா என்ன?"

டாக்டர் பேசிக் கொண்டிருந்தார். புஷ்பராஜ் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"ராத்திரி நேரம். பரபரப்பான ஆஸ்பிட்டல்... பிரசவ வார்டு. அதையொட்டின ஆபரேஷன் தியேட்டர். எல்லாத்துக்கும் மேல, இப்படியொரு சம்பவம் நடக்கப் போகுதுன்னு யூகிச்சு யாருமே கவனமா இருக்க முடியாத ஒரு சூழ்நிலை. இன்னொரு வகையில சொன்னா, குற்றவாளியைத் தவிர வேற யாருக்குமே நடக்கப் போறது தெரியாது. அதனால இயல்பு நிலையிலே எந்தவிதமான சந்தேகமும் ஏற்பட வாய்ப்பு இல்லை. என்ன சொல்றீங்க?"

டாக்டரின் பேச்சு முற்றிலும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒன்று என்பது புஷ்பராஜுக்கும் புரிந்தது.

"இருந்தாலும்..." புஷ்பராஜ் இழுத்தார்.

"அதுக்கெல்லாம் இங்க வேலையே கிடையாது! ஆபரேஷன் தியேட்டருக்குள்ள நுழையற ஒரு நர்ஸாகவோ, டாக்டராவோ வேஷம் போட்டு வந்தா, இயல்பான நிலையிலே யாருக்கு எந்தவிதமான சந்தேகம் ஏற்படப் போகுது? எதுக்காக ஒவ்வொருத்தரும் மத்தவங்களைப் பரிசோதிக்கணும்? சந்தேகம் ஏற்படுகிற சூழ்நிலையும் கிடையாதே அது!" டாக்டர் மேலும் விவரித்தார்.

"நீங்க சொல்றதும் யோசிக்க வேண்டிய, நியாயமான காரணங்கள்தான். மறுக்க முடியாது. நர்ஸ் தங்கம்மாவைப் பத்தி எல்லாரும் நல்லபடியாத்தான் பேசுறாங்க. அவங்களைப் பத்தி என்ன நினைக்கிறீங்க டாக்டர்?" புஷ்பராஜ் கேட்டார்.

"பொதுவா மருத்துவமனைக்கு வர்றவங்க தங்களோட கடமையிலேருந்து தவற மாட்டாங்க. எல்லாத்துக்கும் மேல இது மனிதாபிமானத்தோட சம்பந்தப்பட்ட சேவையும்கூட. ஆனா, இதையே வியாபாரமாக்கி லாபம் தேட நினைக்கிறவங்களை, இந்த வரிசையில சேர்க்க முடியாது. உதாரணத்துக்கு கிட்னியைத் திருடி வித்தவங்களைச் சொல்லலாம். அவங்கள்லாம் டாக்டர்னுகூட இல்லை, மனுஷ இனத்துலயே சேராதவங்க!" டாக்டர் பதிலளித்தார்.

"அந்த மாதிரியெல்லாம் நம்ம ஊர்ல நடக்க வாய்ப்பு இல்லை. போகட்டும் டாக்டர். இயற்கையான பிரசவம் நடக்காதபட்சத்துல ஆபரேஷன் பண்ணலேன்னாக்கூட மரணம் ஏற்படுமா?" புஷ்பராஜ் கேட்டார்.

"நிச்சயமா ஏற்படும்! ஆபரேஷன்கிறதே தவிர்க்க முடியாத கட்டத்துலதான் செய்யப்படுது. அதுக்கு அடுத்த கட்டம்னு ஒண்ணு கிடையாது. இருந்தாலும் அந்த மாதிரியான மரணத்தை சுலபமா அடையாளம் காண முடியும். முகத்தோட சதைகள் இறுகி, கண்களில பயம் நிறைஞ்சு... அந்த வேதனையை நாம பார்க்கும்போதே உணர முடியும்!"

"நல்ல பாயிண்ட் டாக்டர். நாங்களும் இதையொட்டின முடிவுக்குத்தான் வந்தோம். இறந்த பிறகும் சாராம்மாவோட முகம் ரொம்பவும் அமைதியாத்தான் இருந்தது. நீங்க குறிப்பிட்ட எதுவும் அந்த முகத்துல தென்படலை!" என்ற புஷ்பராஜ் எழுந்து ஜன்னலருகில் போய் சற்று நேரம் நின்றார்.

அப்போது மோட்டர் பைக் ஒன்று தெற்குத் திசையிலிருந்து காற்றைக் கிழித்துக்கொண்டு விர்ரென்று பாய்ந்து செல்வதை புஷ்பராஜ் கவனித்தார்.



புஷ்பராஜ் மேற்கொண்டும் அங்கேயே நின்று தெருவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்னங்க புஷ்பராஜ்..." டாக்டர் சோபாவில் இருந்தபடியே கேட்டார்.

"ஒரு நிமிஷத்தில வர்றேன் டாக்டர். வந்து சொல்றேன்." புஷ்பராஜ் தலையைத் திருப்பாமல் அந்த இடத்தைவிட்டு அசையாமல் பேசினார்.

அப்போது டாக்டரின் அருகில் வைக்கப்பட்டிருந்த காட்லெஸ் பீப் சத்தத்தை எழுப்பியது.

டாக்டர் அதைக் கையில் எடுத்து, காதருகில் வைத்தார்.

"ஹலோ... எஸ்... டாக்டர் கேசவ்தான் பேசுகிறேன்...நீங்க யார் என்ன!"

"............"

"நான் தனியா இல்லை. அதை எதுக்காக நீங்க தெரிஞ்சுக்கணும்? சொல்லுங்க... ஹலோ.... ஹலோ" டாக்டரின் கேள்விக்குப் பதில் வராமல் தொடர்பு சட்டென்று துண்டிக்கப்பட்டது.

புஷ்பராஜ் திரும்பி டாக்டரைப் பார்த்தார்.

"ஒரு அனானிமஸ் கால் பேர். சொல்ல மாட்டேங்கிறார். நான் தனியாவா இருக்கிறேன்னு கேட்டார். ஆனா, என்னோட கேள்விக்குப் பதில் சொல்லாம கட் பண்ணிட்டாங்க" டாக்டர் சந்தேகம் நிறைந்த முகத்துடன் புஷ்பராஜைப் பார்த்தார்.

"அப்படியானால் நாம முதல் கட்ட வெற்றி பெற்றிருக்கிறோம் டாக்டர்" புஷ்பராஜ் நின்ற இடத்திலிருந்து அசையாமல் பேசினார்.

அவர் பேசியதன் பொருள் டாக்டருக்குப் புரியவில்லை. அவர் கேள்விக்குறியுடன் புஷ்பராஜைப் பார்த்தார். புஷ்பராஜ் அப்போதும் தெருவையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த மோட்டர் பைக் மீண்டும் அவரது பார்வையில் தட்டுப்பட்டது. இம்முறை அது வடக்கிலிருந்து தெற்காகப் பாய்ந்து சென்றது. சற்று நேரத்துக்குள் அதன் சத்தம் காற்றில் கரைந்து மறைந்தது.

புஷ்பராஜ் திரும்ப வந்து தனது பழைய இடத்தில் அமர்ந்தார்.

"என்ன விஷயம் புஷ்பராஜ்?" டாக்டர் கேட்டார்.

"யாரோ நம்மளைக் கண்காணிக்கிறாங்க. மோட்டர் பைக் ஒண்ணு கொஞ்ச நேரமா இந்த வீட்டையே ரவுண்டு அடிக்குது. அதைத்தான் கவனிச்சிட்டிருந்தேன்."

டாக்டர் எழுந்து ஜன்னலருகே சென்றார்.

இப்போதும் பைக் வடக்குத் திசையில் விரைந்தது. அதில் இரண்டு பேர் பயணம் செய்வது தெரிந்தது.

எச்சரிக்கையா இருங்க டாக்டர். எந்த நிமிஷமும் நீங்க எங்கள்ல யாரை வேணுமானாலும் தொடர்பு கொள்ளலாம். இன்னொரு விஷயம்... டாக்டர் விஜயலட்சுமி இங்க வந்தாங்கன்னா, அவங்களையும் நீங்கதான் பார்த்துக்கணும். முன்பின் தெரியாதவங்க யாராவது அவங்ககிட்ட பேச முயற்சி பண்ணினா உடனே எனக்குத் தகவல் சொல்லுங்க" புஷ்பராஜ் சொன்னார். பிறகு அங்கிருந்து கிளம்பினார்.

டாக்டரும் அவருடன் வாசலுக்கு வந்தார்.

புஷ்பராஜின் கார் கேட்டைத் தாண்டி வெளியேறிய பிறகு டாக்டர் கேட்டை மூடிப் பூட்டினார். பிறகு தனது அல்சேஷன் காவலாளியின் பெல்ட்டை அவிழ்த்து விட்டார்.

வாசல் கதவைப் பூட்டிவிட்டு, இன்வெர்ட்டர் சுவிட்சை ஒரு தடவை சரிபார்த்துவிட்டு உட்புற விளக்குகளையெல்லாம் அணைத்தார்.



சாலைக்கு வந்த புஷ்பராஜின் கார் மேற்குத் திசையில் திரும்பியது.

திடுமென்று தட்டுப்பட்ட மோட்டார் பைக் இடதுபுறமாகத் திரும்பி பாதையின் வளைவில் நின்றது.

பைக்கின் பின்புறம் அமர்ந்திருந்தவன் புஷ்பராஜின் காரை நெருங்கினான்.

டிரைவர் ஸீட்டில் அமர்ந்திருந்த புஷ்பராஜை நெருங்கிய அந்த மனிதன் சட்டென்று கையை உயர்த்தி, "இது என்னன்னு நான் சொல்லணும்கிறது இல்லை." என்றபடி துப்பாக்கியைக் காட்டினான்.

மறுவிநாடி-

புஷ்பராஜ் அந்தக் கையைப் பிடித்து உட்புறமாக இழுத்துத் திருப்பினார். துப்பாக்கி அவன் கையிலிருந்து நழுவி புஷ்பராஜின் காலடியில் விழுந்தது.

அதற்குள் அடுத்தவன் பைக்கை காரின் அருகே கொண்டு வந்தான்.

தலையைக் காருக்குள் விட்டு நிற்கும் கூட்டாளியைப் பிடித்து இழுத்தான். அவன் ஒரு வகையாக காரிலிருந்து விடுபட்டான்.

"என் கையிலயும் பிஸ்டல் இருக்கு... ஆனா, இப்ப நான் உங்களை எதுவும் செய்ய விரும்பலை. என்கிட்ட இருக்கிறது இதைவிட பல மடங்கு சக்தி வாய்ந்த ஏர்பிஸ்டல். பார்க்குறீங்களா?" புஷ்பராஜ் கேட்டபடி இடது கையை மெதுவாக வெளியே விட்டார்.

அதன் பிறகு ஒரு விநாடி கூட தாமதிக்காமல் இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறிப் பறந்தனர்.

அப்போதைய சூழ்நிலையில் காருக்குள் உட்கார்ந்தபடி இரண்டு மனிதர்களையும் பிடிப்பதோ, அவர்களுடன்

போராடுவதோ சாத்தியமில்லை என்பதால்தான் அவர்களை போக விட்டார்.

புஷ்பராஜ் நேராகத் தான் தங்கியிருக்கும் ஓட்டலுக்கு வந்தார்.

கடிகாரத்தைப் பார்த்தார். மணி பதினொன்றைத் தாண்டிவிட்டிருந்தது.

ரிசப்ஷன் கௌண்ட்டரை ஏறக்கட்டிக் கொண்டிருந்தனர். பார் பகுதி இன்னும் பரபரப்பாகவே இருந்தது.

"என்ன ஜானி இன்னிக்கு பாரை மூடுறதா ஐடியா இல்லையா?" புஷ்பராஜ் கேட்டார்.

"நாளைக்கு ஞாயிற்றுக் கிழமையாச்சே! அதனாலதான்..." ரிசப்ஷனிஸ்ட் ஜானி பதிலளித்தார்.

"சார் உங்களைத் தேடி ஒரு பெண்மணி வந்திருந்தாங்க!" ஜானி சட்டென்று ஞாபகம் வந்தவனாகப் பேசினான்.

"யார், என்னன்னு தகவல் ஏதும் சொன்னாங்களா?"

"இல்லை... உங்களை அவசியமாப் பார்க்க வேண்டியிருக்குன்னு சொன்னாங்க. உங்களை வேற எங்க சந்திக்க முடியும்னும் கேட்டாங்க."

"எப்படி இருந்தாங்க?"

"முப்பது வயசு இருக்கும். அவங்களே டிரைவ் பண்ணிட்டு வந்தாங்க."

"காரை கவனிச்சீங்களா?"

"வெள்ளை நிற மாருதி. நம்பரை கவனிக்கலை. அந்த நேரம் கௌண்ட்டர் பிஸியா இருந்தது சார்."

'அது யாராக இருக்கும்?' என்று யோசித்தவாறே நின்றார்.

"சார் சாப்பாடு?"



"வேண்டாம். சாப்டுட்டேன். இனி தூங்க வேண்டியதுதான். உங்க நேரம் தாண்டிடுச்சு போல இருக்கே சரி கிளம்புங்க!"

ஜானி மோட்டார் பைக்கில் ஏறிப் புறப்பட்டான்.

அறைக்குள் வந்தவர் உடனேயே படுத்தார். நல்ல தூக்கத்துள் ஆழ்ந்து கொண்டிருந்த வேளை...

குறுகிய நேரம்தான்.

யாரோ அவரது அறைக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

சட்டென்று கண் விழித்தவர், ஒரு கணம் தயங்கிவிட்டுக் கதவைத் திறந்தார்.

அவரைத் தள்ளிக்கொண்டு ஒருவர் அறைக்குள் நுழைந்தார்.

புஷ்பராஜ் ஒதுங்கி அவருக்கு வழிவிட்டார்.

"நான் தேடி வந்த நபர் நீங்களேதான். சந்தேகமே இல்லை!" என்ற புது மனிதன் எங்கிருந்தோ உருவிய பட்டாக்கத்தியை அவரை நோக்கி ஓங்கினான்.

சட்டென்று மேற்புறமாகத் துள்ளிப் பாய்ந்த புஷ்பராஜ் எதிராளியின் தொண்டைக்குழியில் உருண்டிருந்த ஆதாம் ஆப்பிள் பகுதியில் இரண்டு விரல்களை விசையுடன் பாய்ச்சினார்.

அவன் துவண்டு தரையில் சரிந்தான்.

அதே விசையுடன் பின்புறம் நகர்ந்த புஷ்பராஜ் ஹேங்கரில் தொங்கவிட்டிருந்த பாண்ட்டை உருவிச் சுழற்றிப் பட்டாக்கத்தியை நோக்கி வீசி இழுத்தார்.

பட்டாக்கத்தி வசமாகச் சிக்கிக் கொண்டது.

## 5

புஷ்பராஜின் கைச்சுண்டுதலில் கத்தியுடன் அவனது கையும் சிக்கிக் கொண்டதால், அவனால் கத்தியைப் பழையபடி தூக்க முடியவில்லை.

பிடியை நழுவவிடாமல் முன்புறமாகப் பாய்ந்து வலது காலைப் பிரயோகித்த புஷ்பராஜ் பட்டாக்கத்தியைப் பறக்கச் செய்தார்.

விழுந்து கிடந்தவன் அதற்குள் துள்ளி எழுந்தான்.

புஷ்பராஜ் அவன் பக்கமாக நகர்வதற்குள் அவன் கதவைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் அவனைப் பின்தொடர்வதோ, பிடிக்க முற்படுவதோ புத்திசாலித்தனமல்ல என்பதால் அந்த எண்ணத்தைக் கைவிட்டுக் கதவை மூடி மறுபடியும் படுக்கையில் சரிந்தார்.

தூக்கம் விலகிப் போயிருந்தது.

'தேடி வந்த பெண்மணி யாராக இருக்கும்?' அவரது சிந்தனை ஜானி சொன்ன தகவலையே சுற்றி வந்தது.

மணி பன்னிரண்டு அடித்தது.

காலையில் முதல் வேலையாக ஜேக்கப் ஸ்டீபனைச் சந்திக்கவேண்டும் என்ற முடிவுடன் படுத்தார்.

இவ்வளவு கொடுமையான சம்பவம் நடந்த பிறகு இதுவரை ஜேக்கப்பைச் சந்திக்கவில்லை. அறிமுகப்படுத்திக் கொள்ளக்கூட இல்லை. வழக்கை முன் நடத்திச் செல்லவாவது ஜேக்கப்பைச் சந்தித்தே ஆக வேண்டும்!



புஷ்பராஜ் உறக்கத்தில் ஆழ்ந்தார்.

காலையில் எழுந்தவுடன் அன்றாட அலுவல்களில் ஈடுபட்டு விரைவிலேயே உடைமாற்றிப் புறப்பட்டார்.

புஷ்பராஜ் தனது மாருதியை கேட் ஓரமாக நிறுத்தியபோது உள்ளே ஸ்டீபன் இருப்பது தெரிந்தது.

ஜேக்கப் ஸ்டீபனுடன் வேறொரு ஆணும், பெண்மணியும் இருந்தனர். அவர்கள் எங்கோ புறப்படத் தயாராக இருந்தனர்.

புஷ்பராஜ் வீட்டுக்குள் நுழையும்போது, இருவரும் வெளியேறிவிட்டனர். புஷ்பராஜை ஒரு முறை பார்த்தவர்கள் தங்களது காரில் ஏறிப் புறப்பட்டனர்.

புஷ்பராஜ், ஜேக்கப்பிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"உள்ளே வாங்க... வந்து உட்காருங்க!" ஜேக்கப் ஸ்டீபன் வரவேற்றார்.

புஷ்பராஜ் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தார்.

ஜேக்கப்பின் முகம் அவர் தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருப்பதைக் காட்டியது.

"உங்களைத் தொந்தரவு பண்றதுக்கு மன்னிக்கணும். அதுக்காக வராமலும் இருக்க முடியாதே" பேச்சைத் தொடங்கிய புஷ்பராஜ் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டார்.

"பரவாயில்லை. இதையெல்லாம் ஒரு தொல்லைன்னு நினைக்க முடியுமா, என்ன?" ஜேக்கப் பேசினார்.

"முக்கியமான விஷயங்கள் சிலதைத் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. இந்த வழக்குக்கு அதெல்லாம் உதவும்னு நெனைக்கிறேன். கேட்கலாமில்லையா?" புஷ்பராஜ் பேசத் தொடங்கினார்.

"தாராளமாக் கேளுங்க. எனக்குத் தெரிஞ்சதைச் சொல்றேன்." ஜேக்கப் சோபாவில் வசதியாகச் சாய்ந்து உட்கார்ந்தார்.

"நீங்க எத்தனை வருஷம் அமெரிக்காவுல இருந்தீங்க ஜேக்கப்?"

"சுமார் பதினொரு வர்ஷம்."

"அங்க என்ன செஞ்சீங்க?"

"ஓட்டல் நடத்தினேன்."

"ஓட்டலோட பேரு? நானும் கொஞ்ச நாள் அங்க இருந்திருக்கேன்" புஷ்பராஜ் கேட்டார்.

"ஓட்டல் புளூநைல்!"

"ஓகோ... அதுதானா, தெரியும். வந்திருக்கேன். மிஸ்டர் சில்வெஸ்ட்டரை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்... என்னோட பார்ட்னர்கள்ல அவரும் ஒருத்தர்."

"பிசினஸ் எப்படி இருந்தது?"

"பரவாயில்லை."

"அப்புறம் ஏன் அங்கேருந்து வந்துட்டீங்க?"

"இங்க இருக்கிற சகோதரிகளோட கல்யாணத்துக்காக வந்தேன்."

"அதுக்கப்புறம் திரும்பிப் போகலைங்களா?"

"இல்லை."

"சாராம்மாவை உங்களுக்கு ஏற்கெனகவே பழக்கமிருக்கா?"

"இல்லை... நாங்க எதிர்பாராமதான் சந்திச்சோம்."

"சாராம்மா பேர்ல நிலம் ஏதாவது இருக்குதா?"



"அவங்களோட ரெண்டு சகோதரிங்க பேர்லதான் இருக்கு."

"உங்க மனைவிக்கு நோய் ஏதாவது இருந்ததா?"

"குறிப்பிட்டுச் சொல்ற அளவுக்கு எந்த நோயும் சாராம்மாவுக்கு இருந்ததில்லை" ஜேக்கப் கூறினார்.

"உங்களோட கல்யாணம் இவ்வளவு தாமதமானதுக்கு ஏதாவது காரணம் இருக்கா?"

"குறிப்பா எந்தக் காரணமும் கிடையாது. எப்பப் பார்த்தாலும் ஒரே பிஸி. எதைப் பத்தியும் யோசிக்க நேரமில்லை. நாட்கள் அப்படியே ஓடிடுச்சு."

"டாக்டர் விஜயலட்சுமியை உங்களுக்குத் தெரியுமா?"

"ஓரளவுக்குத் தெரியும். எப்பவாவதெல்லாம் அவங்களும் இங்க வர்றதுண்டு."

"அவங்க இன்னும் கல்யாணம் பண்ணிக்காதது ஏன்னு உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"தெரியாது. நான் அதையெல்லாம் விசாரிக்கலை."

"ஓகே. தற்சமயம் இந்த அறிமுகத்தோட நான் கிளம்புறேன். மறுபடியும் நாம சந்திக்கலாம்" புஷ்பராஜ் எழுந்தார்.

புஷ்பராஜ் காரை ஸ்டார்ட் செய்து கண்ணிலிருந்து மறைவது வரையில் ஜேக்கப் வாசலிலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்.

மறு நாளும் டாக்டர் விஜயலட்சுமியைப் பற்றி எந்தவிதத் தகவலும் கிடைக்கவில்லை.

மதிய நேரத்தில் புஷ்பராஜ், நர்ஸ் தங்கம்மாவுடன் பேச, தொலைபேசியில் மருத்துவமனையைத் தொடர்புகொண்டபோது, அவர் டியூட்டியில் இல்லை என்பது புரிந்தது. குவார்ட்டர்ஸ் விலாசத்தை வாங்கிக் கொண்டார்.

அவருடன் பேசினால் ஏதாவது தகவல்கள் கிடைக்கலாம் என்று தோன்றியதால், அந்த விலாசத்துக்கு காரைச் செலுத்தினார்.

நல்லவேளையாக தங்கம்மா வீட்டிலேயே இருந்தார்.

புஷ்பராஜ் கதவைத் தட்டினார்.

அவரை, தங்கம்மாவுக்கு அறிமுகமில்லாததால் சந்தேகத்துடன் கதவைத் திறந்தார்.

“பயப்படாதீங்க. நான் ஒரு டிட்டெக்டிவ். பேர் புஷ்பராஜ். அன்னிக்கு நடந்த சம்பவம் தொடர்பா சில விவரங்கள் தேவைப்படுது.” புஷ்பராஜ் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

“அப்படிங்களா... வாங்க... உள்ள வந்து உட்காருங்க” தங்கம்மா அவரை வரவேற்றார்.

அந்தச் சிறிய வரவேற்பறை அழகாகப் பராமரிக்கப்பட்டிருந்தது. சோபா ஒன்றும், டி.வி. ஒன்றும், சிறிய ஸ்டூல் ஒன்றில் ஃபிளவர்வாஸும் இருந்தன.

புஷ்பராஜ் சோபாவில் அமர்ந்தார்.

“தாகத்துக்கு ஏதாவது...?” தங்கம்மா கேட்டார்.

“உங்க விருப்பம். பானம் கொஞ்சம் சூடானதா இருந்த நல்லது.” புஷ்பராஜ் சொன்னார்.

“அப்ப டீ போடுறேனே...” புன்னகையுடன் பதிலளித்தார்.

வயது முப்பதிலிருந்து முப்பத்தைந்துக்குள் இருக்கலாம். அழகாக இருந்தார். சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னால், என்ன காரணத்தாலோ கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றிருந்தார்.

குழந்தை இல்லாததுதான் பிரிவுக்குக் காரணம் என்று கணவர் தரப்பில் சொல்லப்பட்டதாம். இப்போது வேறொரு மனைவி மூலம் அவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளதாம்.



அதனால் தங்கம்மா இப்போது தனிமையில்.

மூன்று நிமிடத்துக்குள் கிளாஸில் டீ வந்தது.

“நான் வீட்டுல இருந்தா ஃபிளாஸ்க்கில் டீ டிகாக்ஷன் தயாரா இருக்கும்” என்ற தங்கம்மா பிஸ்கெட் நிறைந்த பிளேட்டையும் டீப்பாயின் மீது வைத்தார்.

“இதெல்லாம் வேண்டாமே...” புஷ்பராஜ் கூறினார்.

“பரவாயில்லை... சாப்பிடுங்க” தங்கம்மா சோபாவின் மற்றொரு விளிம்பில் உட்கார்ந்தார்.

டீயை ஒரு வாய் உறிஞ்சிய புஷ்பராஜ் டம்ளரை டீப்பாய் மீது வைத்தபடி, “நான் சில கேள்விகள் கேட்கலாமா?” என்றார்.

“டீயில ஏதாவது குறை...?”

“அதெல்லாம் கிடையாது. நல்லாவே போட்டிருக்கீங்க. நான் மெதுவாக் குடிக்கிற ஆசாமி” என்ற புஷ்பராஜ் சிகரெட் பாக்கெட்டை வெளியில் எடுத்தார். சூழ்நிலை ஞாபகம் வந்தவராக மறுபடி பாக்கெட்டுக்குள் போடப்போனார்.

“தயங்காதீங்க... நீங்க சிகரெட் பத்தவைக்கலாம். அவரும் நிறைய சிகரெட் பிடிக்கிறவர்தான்” என்ற தங்கம்மா அலமாரியைத் திறந்து ஆஷ்ட்ரே ஒன்றை அவருக்கு முன்னால் எடுத்து வைத்தார்.

சிகரெட்டைப் பற்றவைத்தார்.

தங்கம்மா அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“சம்பவம் நடந்த இரவைப் பத்தி எனக்குத் தெளிவான ஒரு படம் தேவைப்படுது. அதாவது டாக்டர் விஜயலட்சுமி ஆஸ்பிட்டல்லேர்ந்து வெளியேறுறதுக்கு அஞ்சு மணி நேரத்துக்கு முன்னால இருந்து, சாராம்மாவோட உடல் ஆபரேஷன் டேபிளுக்குக் கீழ அசைவற்றுப் போனது வரைக்கும். சுருக்கமாச் சொன்னாப் போதும்” புஷ்பராஜ் தனது மேற்புற பாக்கெட்டில்

இருந்த சிறிய டேப்ரிக்கார்டரை தங்கம்மாவுக்குத் தெரியாமல் லாகவமாக ஆன் செய்தார்.

தங்கம்மா பேசத் தொடங்கினார்.

“அட்மிட் ஆகுறதுக்கு முன்னால சாராம்மாவும், அவரோட வீட்டுக்காரரும் ஆஸ்பத்திரிக்கு வந்தாங்க. டாக்டர் விஜயலட்சுமியைச் சந்திச்சாங்க. ஆரம்பத்துல அவங்களைக் கவனிச்சுக்கிட்டது வேற ஒரு டாக்டர். எதிர்பாராம அவங்க லீவில போனதால விஜயாம்மா அட்டெண்ட் பண்ணினாங்க.”

புஷ்பராஜ், தங்கம்மா சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

“இந்த ஆபரேஷனை விஜயா மேடமே நடத்தணும்னு, அவங்க புருஷன் பிடிவாதமா இருந்தார்.”

“அதைப் பத்தி ஏதாவது பேசிக்கிட்டாங்களா?” புஷ்பராஜ் விசாரித்தார்.

“ஆமாம். விஜயாம்மாவும், சாராம்மாவும் ஏற்கனவே சிநேகிதிகள் ஆச்சே.”

“சரி... சாராம்மாவோட வீட்டுக்காரரைத் தவிர வேற யாராவது அவங்களைப் பார்க்க வந்திருந்தாங்களா?”

“ஞாபகமில்லை... ஒருவேளை அவங்க அட்மிட் ஆகியிருந்த அறைக்கு யாராவது வந்திருக்கலாம்.”

“சாராம்மாவோட வீட்டுக்காரருக்கு விரோதிகள் சிலர் இருக்கிறதாக் கேள்விப்பட்டோம். உங்களுக்கு அதைப் பத்தி ஏதாவது தெரியுமா?”

“நானும் கேள்விப்பட்டிருக்கேன்... அவ்வளவுதான்.”

“சாராம்மா எதனால இறந்திருப்பாங்கன்னு நினைக்கிறீங்க?”



“அதை என்னால தெளிவாச் சொல்ல முடியலை. ஆனா, அந்த ஆபரேஷன் மட்டும் நடந்திருந்தா அவங்க இறந்திருக்க மாட்டாங்க!”

“நடக்க வேண்டிய ஆபரேஷன் நடக்காததால, அதை நடத்தியிருக்க வேண்டிய டாக்டர் விஜயலட்சுமி மேல மத்தவங்க குற்றம் சாட்டுறது இயற்கைதானே?”

“விஷயம் தெரியாதவங்க வேணும்னா அப்படிச் சொல்லலாம். விஜயலட்சுமி மாதிரி ஒரு டாக்டரால அப்படியெல்லாம் நடந்துக்க முடியாது!”

“சமீபத்துல கிட்னி திருடின டாக்டர்களைக்கூட பார்த்திருக்கோமே?”

“இருக்கலாம். கடவுள் இருக்கிறதா சொல்ற நாமளேதான் பிசாசுகளும் இருக்கிறதா நம்புறோம்.”

“ஏன் உங்க டாக்டரும் அப்படி ஒரு பிசாசா மாறியிருந்தால்...”

“நீங்க சொல்ற மாதிரி என்னால நெனைச்சுக் கூடப் பார்க்க முடியாது. கடந்த அஞ்சு வருஷமா நான் அவங்களோட பழகியிருக்கேன். இன்னிய தேதி வரைக்கும் அவங்ககிட்டேருந்து எந்தத் தவறையும் நான் பார்க்கலை. அதை என்னால எங்கேயும் உறுதியாச் சொல்ல முடியும்.”

“சரி... நீங்க சொல்றதை நான் ஒப்புக்கிறேன். நீங்க இந்த அளவுக்கு நம்பிக்கை வெச்சிருக்கிற ஒரு டாக்டர், ஒரு நோயாளி சீரியஸான நிலைமையில ஆபரேஷன் தியேட்டர்ல படுத்திருக்கும்போது எப்படி வெளியேறினாங்க?”

இந்தக் கேள்வி தங்கம்மாவை யோசிக்க வைத்தது.

அவரால் அதற்கு உடனடியாக எந்த ஒரு பதிலையும் சொல்ல முடியவில்லை.

புஷ்பராஜ் டம்ளரிலிருந்த டீயைக் காலி செய்தார். புகையில் கரைந்த சிகெரட் துண்டை ஆஷ்ட்ரேயில் அழுத்தித் தேய்த்தார்.

"உங்களோட கேள்வி நியாயமானதுதான். அவங்க எப்படி அந்த நிலைமையில போனாங்க? ஒருக்காலும் அவங்க அப்படி செஞ்சிருக்கக்கூடாது!"

"சரி... என்ன காரணத்துக்காக அவங்க போனாங்கன்னு உங்களால ஏதாவது யூகிக்க முடியுதா?"

"ஒரு போன்கால். அதுவும் வீட்டுலேர்ந்து வந்ததாச் சொன்னாங்க. நான் என்ன நினைச்சேன்னா, அவங்க அத்தைக்கு திடீர்னு உடம்பு சரியில்லாமப் போயிருக்கலாம்னு..."

"ஆனா, அவங்க அத்தை அப்படி எதுவும் போன் பண்ணலேன்னு சொல்றாங்க."

"இந்த நிலைமையில நான் வேற என்னத்தைச் சொல்றது?" தங்கம்மா தனது இயலாமையை வெளிப்படுத்தினார்.

"தற்சமயம் எனக்கு இந்தத் தகவல்கள் போதும்" புஷ்பராஜ் எழுந்தார்.

"சார், எனக்குத் தெரிஞ்சு நான் எந்தத் தப்பும் செய்யலை." தங்கம்மாவின் குரலில் பயம் தெரிந்தது.

புஷ்பராஜ் மறுபடியும் உட்கார்ந்தார்.

"இன்னொரு விஷயம்..."

"கேளுங்க!"

"ஆபரேஷன் தியேட்டருக்குள்ள அந்நியர் யாராவது திடீர்னு நுழைய முடியுமா?"

"அவ்வளவு சுலபமில்லை. அதுக்குன்னே தனியா யூனிஃபாரம் இருக்கு."



"அங்கதான் சந்தேகம் வருது. அந்த யூனிஃபாரத்தைக் கச்சிதமா போட்ட ஒருத்தர் அதுக்குள்ள நுழையுறது, உங்களுக்குச் சந்தேகமில்லாதபோது சாத்தியம்தானே?"

இந்தக் கேள்விக்கும் தங்கம்மாவால் பதில் சொல்ல முடியவில்லை.

"என்னங்க... நான் சொல்றது சாத்தியம்தானே? ஒரு நிமிஷம் யோசிச்சுப் பாருங்க" புஷ்பராஜ் திரும்பவும் கேட்டார்.

"என்னால இதை நம்பவே முடியலை. அப்படி அந்த இடத்துக்கு யார் வருவாங்க?"

"நீங்க சொல்றது உங்க கருத்தை. நான் சொல்றது நடைமுறை சாத்தியத்தை!"

"நுழைய முடியும்!" சற்று நேரத்துக்குப் பிறகு தங்கம்மா ஒப்புக்கொண்டார்.

"சரி... இப்ப ரெண்டாவது கேள்விக்கு வர்றேன். நான் சொன்ன மாதிரி நடந்திருந்தா, அதுக்கு அங்க இருக்கிற வேற யாராவது ஒருத்தரோ, ரெண்டு பேரோ உதவியிருக்கலாம். அப்படி எதுவும் இல்லாம ஒரு ஆஸ்பத்திரியோட ஆபரேஷன் தியேட்டருக்குள்ள, இந்த மாதிரி ஒரு யூனிஃபாரம் போட்டுட்டுச் சட்டுன்னு ஒருத்தர் நுழைய முடியுமா?" புஷ்பராஜ் கேட்டார்.

"இதுக்கு நான் என்னத்தைங்க சொல்றது? எனக்கு ஒண்ணுமே புரியலை. இதையெல்லாம் கேக்கக் கேக்க என் தலை மொத்தமும் சுழலுது!" தங்கம்மா கூறினார்.

"ஓகே... உங்களோட ஒத்துழைப்புக்கு ரொம்ப நன்றி. நாம மறுபடியும் சந்திக்க வேண்டி இருக்கலாம். நீங்க எனக்கு இன்னொரு உதவியும் செய்யணும். அன்னிக்கு டியூட்டில இருந்த யாராவது எட்டுமணியிலேர்ந்து பத்து மணிக்குள்ள அங்கேயிருந்து காணாமலோ, மறைஞ்சோ போயிருந்தாங் களான்னு கண்டுபிடிக்கணும். கண்டுபிடிச்சா அதை எனக்கு உடனே தெரியப்படுத்தணும். இதுதான் என்னுடைய டெலிபோன் நம்பர்."

புஷ்பராஜ் தனது செல் போனின் நம்பர் மற்றும் கோடு - ஐயும் தங்கம்மாவிடம் கொடுத்தார்.

புஷ்பராஜ் விடை பெற்றார்.

வாசலில் நின்றிருந்த தங்கம்மாவின் முகம் சோர்வினால் கருமையடைந்திருந்தது.

மாலை நேரமானபோது புஷ்பராஜ் ஓட்டல் லிடியாவுக்குச் சென்றார். அது அவருக்கு மிகவும் பழக்கமான இடமாக இருந்ததால், ரிசப்ஷனிஸ்ட் விஷ் பண்ணினார்.

அந்த ஓட்டலைப் பொறுத்தவரை புஷ்பராஜ் எப்போதும் ஒரு மெடிக்கல் ரெப்ரசென்டேட்டிவ்தான். அங்கு அறை எடுப்பதும் அதே முறையில்தான்.

கீபோர்டைக் கவனித்த ரிசப்ஷனிஸ்ட், "சார் உங்களோட வழக்கமான ரூம் இப்ப ஃப்ரீதான்" என்றார்.

"அப்ப அதையே கொடுங்க!" சாவியை வாங்கிக் கொண்ட புஷ்பராஜ் பிரீஃப்கேஸுடன் படிகளில் ஏறினார்.

ரூம் எண் 234-க்கு முன்னால் வந்தவர் வராந்தாவின் இருபுறமும் பார்வையைச் செலுத்தினார்.

எவரும் தட்டுப்படவில்லை.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார். பிரீஃப்கேஸை கட்டிலின் கீழேவைத்துக் காலால் உட்புறம் தள்ளினார். கைகடிகாரத்தைப் பார்த்தார்.

மணி எட்டு ஐம்பது. சாப்பாட்டுக்கு நிறைய நேரம் இருந்தது. அறையைப் பூட்டிக்கொண்டு கீழ்த்தளத்துக்கு வந்தார். பார் போர்டு அம்புக்குறியிட்ட பகுதியை நோக்கி நடந்தார்.

திறந்திருந்த கதவு வழியாக உட்புறம் பார்த்தார். ஒரு தீர்மானத்துக்கு வந்தவராக உட்புறம் நுழைந்தார். இருளடைந்த மூலைக்கு வந்தார்.



ஆங்காங்கே நிழல்கள் போல் மனிதர்கள் மேஜை விளிம்புகளில் தென்பட்டனர். ஒவ்வொரு டேபிளிலும் மிகவும் தாழ்வான நிலையில் மேற்புறம் குடைபோன்ற ஷேடின் கீழ் வட்டவடிவமாக மங்கலான வெளிச்சம் தட்டுப்பட்டது.

ஒரே ஒருவர் மட்டும் தனியாக அமர்ந்திருந்த டேபிளை நெருங்கினார் புஷ்பராஜ். அவருக்கு எதிரில் காலியாகக் கிடந்த நாற்காலியில் அமர்ந்தார்.

எதிரிலிருந்தவர் சில்ஹவுட் ஓவியம் மாதிரி மெதுவாக அசைந்து கொண்டிருப்பது புலப்பட்டது. அவருக்கு முன்னால் ஒரு கிளாஸில் விஸ்கியும், அப்போதுதான் திறந்து வைக்கப்பட்ட பீர்பாட்டிலும் இருந்தன.

பேரர் அருகில் வந்தார்.

புஷ்பராஜ், "ஒரு பீர்" என்றார்.

எதிரில் அமர்ந்திருந்தவர் முகத்தை உயர்த்தாமலே புஷ்பராஜை ஒரு தடவை ஊன்றிப் பார்த்துவிட்டு, விஸ்கி கிளாஸில் பீர் பாட்டிலைச் சரித்தார்.

கிளாஸ் நிறைந்ததும் பீர்பாட்டிலைச் செங்குத்தாக நிறுத்தி வைத்தார்.

கிளாஸை உதட்டருகே கொண்டு சென்றவர் முத்தமிடுவது போல் சின்னதாக சிப்பினார். கிளாஸை மறுபடி டேபிளில் வைத்துவிட்டு, சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்தார். சிகரெட் பாக்கெட்டை புஷ்பராஜின் பக்கமாகப் போட்டார்.

அதற்குள் பேரர் பீரும் கண்ணாடி மக்கும் எடுத்து வநதார்.

புஷ்பராஜ், பீர் பாட்டிலிலிருந்து பீரை கிளாஸுக்குள் சாய்த்தவாறு இறக்குமதி செய்தார். நிறைந்ததும் இரண்டையும் வேறுபடுத்தி வைத்தார்.

பேரர் அங்கிருந்து கிளம்பினார்.

புஷ்பராஜ் ஒரு மிடறு பீரை தொண்டைக்குள் வழியவிட்டார்.

எதிரிலிருந்தவர் தந்த சிகரெட் பாக்கெட்டிலிருந்து ஒன்றை உருவியவர் உதட்டில் பொருத்திப் பற்றவைத்தார்.

சிக்ரெட் பாக்கெட்டை மெதுவாக டேபிளில் வைத்த புஷ்பராஜ் மெதுவான குரலில் முன்னால் இருந்தவரை அழைத்தார். "ஹலோ மிஸ்டர் சுரேஷ்பாபு!"

## 6

முன்புறம் அமர்ந்திருந்தவர் முகத்தை உயர்த்தி புஷ்பராஜை ஊன்றிக் கவனிக்க முயன்றார். வெகு நேரமாக அவர் குடித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அந்தக் கண்கள் சொல்லின.

"சுரேஷ்பாபு தானே... அதுல சந்தேகம் எதுவுமில்லையே?" புஷ்பராஜ் மறுபடியும் கேட்டார்.

"யெஸ்.... சுரேஷ்பாபுதான், பாபுன்னு என்னைக் கூப்பிடுறதுதான் பிடிக்கும்" சிகரெட் சாம்பலை விஸ்கி கிளாஸுக்குள் தட்டினான். பிறகு கிளாஸை டேபிள் மீது வைத்தான்.

அவனது செய்கைகள் புஷ்பராஜுக்கு வியப்பு அளிக்கவில்லை. சிகரெட் மற்றும் சுருட்டுச் சாம்பலை மதுக்கிண்ணத்தில் போட்டுக் கலக்கிக் குடிப்பவர்களை அவர் ஏராளமாகவே பார்த்திருக்கிறார்.

"இப்படி ஒரு விருப்பம் இருக்கிறதும் நல்லதுதான். ஆனா, உங்களை சுரேஷ்னு கூப்பிடத்தான் நான் விரும்புறேன். ரெண்டாவதா இதை ஆரம்பகட்ட மரியாதைன்னு நினைச்சுக்கங்க..." புஷ்பராஜ் மேலும் சற்று பீரை உறிஞ்சினார்.



"இது வரையில யாரும் என்னை அப்படிக் கூப்பிட்டதே இல்லை" அவன் மறுக்கும் நோக்கத்தில் சொன்னான்.

"சரி ஒப்புக்கிறேன். நீங்க ஒரு அப்பாவின்னுதான் கேள்விப்பட்டிருக்கேன்" புஷ்பராஜ் சிகரெட் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டிவிட்டு சிகரெட்டை வளைவான அதன் உட்குழிந்த வாய்க்காலில் வைத்தார்.

"அப்பாவியா நானா... எப்போ?" அதை அவன் விரும்பவில்லை என்று புரிந்தது.

"காரணத்தோடதான் பேசுறேன். கொஞ்ச நாளைக்கு முன்னாடி யாரோ ஒருத்தர் கிட்ட... ஜேக்கப் ஸ்டீபன்கூட சண்டை போட்டிங்களாமே... நிஜமா?"

"ஓ... அதைக் கேக்குறீங்களா? அன்னிக்கு நான் கொஞ்சம் ஓவர் ஆகிட்டேன்."

"அந்த ஆள் உங்களைக் கண்டபடி அடிச்சிட்டாரேமே..."

"அப்படி அவன் என்னைத் தொட்டிருந்தான்னா, அதுக்கான தண்டனை அவனுக்கு கிடைச்சே தீரும்... அது நிச்சயம்!"

"அதுக்குப் பிறகு நீங்க அந்த ஆளைச் சந்திக்கலை போலிருக்கே?"

"நீங்க பேசுறதைப் பார்த்தா என்னை உசுப்பேத்த வந்த மாதிரி இருக்கே?"

"நீங்கே ஒரு தற்புகழ்ச்சிக்காரர்னு புரிஞ்சுக்கிட்டேன். கண்மண் தெரியாமக் குடிக்கிறது, குடிச்சபிறகு யார் கிட்டேருந்தாவது உதை வாங்குவீங்க... அப்படித்தானே?"

இதைக் கேட்ட சுரேஷ்பாபு சட்டென்று துள்ளி எழுந்தான். அவனது கை விஸ்கி பாட்டிலின் கழுத்துப் பகுதியை இறுக்கிப் பிடித்திருந்தது.

"முட்டாள்தனமா நடந்துக்காதீங்க. இப்பவே நீங்க ஓவராயிட்டீங்க. முதல்ல உட்காருங்க" புஷ்பராஜ் அவனது தோளைப் பிடித்து அழுத்தினார்.

அவன் திரும்பவும் நாற்காலியில் அமர்ந்தான்.

"சரி... இனிமே நாம விஷயத்துக்கு வருவோம்." புஷ்பராஜ் மறுபடியும் மக்கில் பீரை நிரப்பினார்.

பீர் மட்டம் நுரையுடன் உயர்ந்தது.

"என்ன விஷயம் சொல்லுங்க!" சுரேஷின் குரல் இப்போது சற்று ஆறுதலடைந்தாற் போலிருந்தது.

"நீங்க யாரையாவது பழி வாங்கணும்னா ஆம்பிளையா அதை அவர்கிட்டேயே வெச்சுக்கணும், இல்லாம அவரோட பொண்டாட்டிகிட்டப் போய் பழி தீர்க்கலாமா?" புஷ்பராஜ் கேட்டார்.

அப்போது வேறொரு நபர் திடுமென்று வந்து சேர்ந்தார். நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டு அவர்களுக்கு அருகில் அமர்ந்தார்.

"ஹலோ பாபு... என்ன பிரச்சினை?" வந்தவர் கேட்டார்.

"யாரு தம்பியா....நீங்களும் இங்கதான் இருந்திங்களா?" பாபு திருப்பிக் கேட்டான்.

"மூணாவது டேபிள்ல இருந்தேன் வந்து கொஞ்ச நேரம் தான் ஆச்சு. திடும்னு எழுந்திரிக்கிறதையும் உக்கார்றதையும் கவனிச்சேன்...." என்ற தம்பி புஷ்பராஜை முறைப்பது போல் பார்த்தான்.

புஷ்பராஜ் அவனைப் பொருட்படுத்தியதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

"நீங்க யாரு?" புஷ்பராஜைப் பார்த்துக் கேட்ட தம்பியின் குரலில் நட்புணர்வு மருந்துக்குக்கூட இல்லை.



"ஒரு குடிமகன்... வேற என்ன சொல்ல முடியும்?" புஷ்பராஜ் லாகவமாகப் பேசினார்.

புஷ்பராஜின் பதில் அங்கிருந்த இருவருக்குமே அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்பது தெரிந்தது.

"துரை கெட்டிக்காரர்தான். பார்த்தா நம்ம பக்கத்து ஆளாத் தெரியலையே?" தம்பி மிகவும் இளக்காரமான குரலில் பேசினார்.

"என்னைப் பொறுத்தவரைக்கும் எல்லா இடமும் ஒரே மாதிரிதான். இதுல எந்த ஊரைக் குறிப்பிட்டுச் சொல்றது?" புஷ்பராஜும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

"பாருக்குள்ள பிரச்சினை பண்றது நல்லதில்லை. வேணும்னா வெளியிலே போய் வெச்சுக்கலாம்." தம்பி எச்சரித்தார்.

"இது நல்ல யோசனை. பின்னாடி கார் பார்க் பண்ற இடம் இருக்கு. அது தாராளமாகப் போதும். சரி... முதல்ல யார் வரப் போறீங்க? சுரேஷ் முதல்ல வராம இருக்கிறது நல்லது." புஷ்பராஜ் மீதமிருந்த பீரை ஒரே இழுப்பில் குடித்துத் தீர்த்தார்.

அதற்குள் பேரர் அருகில் வந்தார்.

"பில்லை கௌண்ட்டர்ல கொடுங்க" புஷ்பராஜ் சொன்னார்.

"நான் கண்டிப்பா பார்க் பண்ற இடத்துல இருப்பேன். மறக்காம வந்து சேருங்க..." என்று இருவரையும் பார்த்துச் சொன்ன புஷ்பராஜ் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார்.

கார் பார்க்கிங்கை நோக்கி நடந்தார். காத்திருந்தார்.

சற்று நேரத்துக்குள் சுரேஷ் பாபுவும், அவனது கூட்டாளிகளும் அங்கு வந்து சேர்ந்தனர்.

புஷ்பராஜை நெருங்கினர்.

"வீட்டுல சொல்லிட்டு வந்திருக்காப்புல இருக்கு, நீங்க ரெண்டு பேரும்!" அவர் கேட்டார்.

"நாங்க நிரந்தரமாவே சொல்லி வைச்சிருக்கோம். அது போகட்டும்... நீங்க வலுச்சண்டைக்கு வரும்போது நாங்க மட்டும் ஒதுங்கலாமா என்ன?" என்ற தம்பி புஷ்பராஜின் தோள் மீது கையை வைத்தார்.

"சாராம்மா ஜேக்கப்பைக் கொல்றதுக்கு வேஷம் போட்டுப் போன நடிகன் நீதானே?" புஷ்பராஜ் அவனது கையைப் பிடித்துத் தாழ்த்தினார்.

"என்னய்யா பேத்துறீங்க? சாராம்மாவா? அது யார் புது கேஸ்?" தம்பி கேட்டார்.

"ஓகோ... அப்படின்னா ஆபரேஷன் தியேட்டருக்குள்ள நுழைஞ்சது உன் கூட்டாளி பாபுதானே? நீங்களா ஒப்புக்கலேன்னா, துடிதுடிச்சு ஒப்புக்க வேண்டியிருக்கும்." புஷ்பராஜ், பாபுவின் காலில், காலால் தட்டினார்.

பாபு தரையில் விழுந்தான்.

தம்பி சட்டென்று நிழலில் ஒதுங்கி மறைந்தான்.

எழுந்து தாக்க முயன்ற பாபுவை, புஷ்பராஜ் தற்காப்புக்காகத் தடுத்தார். அவன் சரிந்தான்.

அவனை வாரிக் கொண்டு போய் மாருதிக்குள் திணித்தார். கார் எஸ்.பி. அலுவலகத்தை நோக்கி விரைந்தது.

அரை மயக்கத்தில் இருந்த பாபுவை பெஞ்ச் ஒன்றில் கொண்டுப்போய்ப் போட்ட புஷ்பராஜ், டோமி அலெக்ஸுக்கு போன் செய்தார்.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அலெக்ஸ் வந்து சேர்ந்தார்.

"சுரேஷ் பாபுகிட்ட நீங்க விசாரணை நடத்தலாம்." புஷ்பராஜ் டோமியிடம் சொன்னார்.

அவர் அறைக்குள் நுழைந்தார்.



சுரேஷ்பாபு அவ்வளவு சீக்கிரம் கண் விழிப்பதாகத் தெரியவில்லை.

"ஒரு அரைமணி நேரம் போனா எல்லாம் தெளிஞ்சுடும். அப்புறமா விசாரிங்க." புஷ்பராஜ் சொன்னார்.

மறுபடியும் போனை நெருங்கியவர் ஜேக்கப்புக்கு போன் செய்தார்.

மறுமுனையில் ரிசீவர் மேற்புறம் உயர்ந்தது.

"சுரேஷ்பாபு எங்க கஸ்டடியிலதான்." புஷ்பராஜ் சொன்னார்.

"நீங்க இப்ப எங்கேயிருந்து பேசுறீங்க சார்?" எதிர்முனை கேட்டது.

"எஸ் பி. ஆபீஸிலிருந்து!"

"நல்ல வேலை பண்ணுனீங்க! அநேகமாக இவன்தான் எல்லாத்துக்கும் காரணமா இருப்பான். என்னைப் பழி வாங்குறதுக்காக இப்படிச் செஞ்சிருப்பான்."

"நீங்க சொல்றது ஒருவேளை உண்மையா இருக்கலாம். ஆனா, அதையெல்லாம் நாம கோர்ட்டுக்கு நிரூபிச்சே ஆகணும். அதுக்கு உங்களோட உதவியும் தேவைப்படும்." புஷ்பராஜ் கூறினார்.

"எந்த விதமான உதவியும் செய்யத் தயாரா இருக்கிறேன்."

"தேவைப்படும்போது கூப்பிடுறோம். கவனமா இருங்க" புஷ்பராஜ் தொடர்பைத் துண்டித்தார்.

அதற்குள் சுரேஷ்பாபு கண் விழித்தான். புஷ்பராஜ் அவனிடம் வந்தார்.

"நீங்க இப்ப இருக்கிற இடம் போலீஸ் அதிகாரியோட ஆபீஸ். ஒரு கொலையில தொடர்பு உடையவரா, சந்தேகத்தின் பேர்ல இங்க பாதுகாப்புல வெச்சிருக்காங்க. மேற்கொண்டு

இவங்களோட விசாரணைக்கு நீங்க ஒத்துழைப்புக் கொடுகிறதைப் பொறுத்துதான் மத்ததெல்லாம் இருக்கும்.'' புஷ்பராஜ் எச்சரித்தார்.

“என்னையா கொலைகாரன்னு சொல்றீங்க? நீங்க போலீஸ்ங்கிறதால இப்படி எதை வேணும்னாலும் சொல்லிடறதா? நான் யாரைக் கொலை பண்ணினேன், உங்களையா?” சுரேஷ்பாபு கேட்டான்.

“பதற்றப்படாதீங்க. நீங்க ஜேக்கப் ஸ்டீபனோட மோதினீங்க. அவர் உங்களைக் கடுமையாத் தாக்கிட்டார். அப்பவே பழிக்குப் பழிவாங்குவேன்னு சபதம் போட்டிங்க. அதே மாதிரி புத்திசாலித்தனமா நடந்துக்கிட்டிங்க. இந்த அளவுக்கு உங்களுக்கு உதவின இன்னொரு கெட்டிக்காரர் யார்?”

“என்னங்க இது... அபாண்டமா எதையெல்லாமோ பேசுறீங்க. நான் பழி வாங்கினேனா?” சுரேஷ்பாபுவிடமிருந்த மொத்த போதையும் அந்த விநாடியிலேயே வடிந்து விட்டதாகத் தோன்றியது.

“நான் சொன்னதெல்லாம் உண்மை இல்லேன்னா கிளப்புல நடந்தது என்னங்கிற உண்மையை நீங்களாவது சொல்லுங்க!” புஷ்பராஜ் அவனது கண்களைப் பார்த்தபடி பேசினார்.

“கிளப் சமாசாரத்தைக் கேட்குறீங்களா? அந்த ஜேக்கப் ஒரு சண்டைக் கோழி. தண்ணியடிச்சுட்டா அந்த ஆளுக்கு எதுவுமே புரியறதில்லை. கிளப்புல அவர் என்னை அடிச்சுட்டார். கோபத்துல நான் என்னென்னவோ பேசிட்டேன். அவ்வளவு தான்!”

“அப்படியானா நீங்க அவரைத் திருப்பித் தாக்கலையா?”

“இல்லை... அந்த அளவுக்கு நான் எக்கச்சக்கமான போதையில இருந்தேன்”

“சரி. நீங்க எப்பத்தான் அதிகமா குடிக்காம இருந்திருக்கீங்க? என்னோட ஒரேயொரு கேள்விக்கு மட்டும்



பதிலைச் சொல்லுங்க. பிரசவ ஆஸ்பத்திரியில உங்களுக்குத் தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களா? இது என்னோட சொந்த விஷயத்துக்காகக் கேக்குறேன். என் மனைவிக்கு டெலிவரி டயம் ஆகிடுச்சு.”

“டாக்டர் விஜயலட்சுமி இந்த விஷயத்துல ரொம்பவும் கைராசியானவங்க!”

“உங்களுக்கு அவங்களை நேரடியா பழக்கமா?”

“பழக்கம்தான்.”

“எப்படி?”

“ரெண்டு தடவை நான் அவங்களைப் பார்க்கப் போயிருக்கேன். அதுகூட என் நண்பர்களுக்காக!”

“ஜேக்கப் ஸ்டீபன் அவரோட சம்சாரத்தை அட்மிட் பண்ணின பிறகு நீங்க டாக்டர் விஜயலட்சுமியைச் சந்திச்சிங்களா?”

“சரியான தேதி சொன்னால் ஞாபகப்படுத்திச் சொல்றேன்.”

புஷ்பராஜ் சற்று நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு சொன்னார்: “இந்த மாசம் பத்தாம் தேதியில இருந்து இருபத்தோராம் தேதிக்கு இடைப்பட்ட நாள்ல?”

சுரேஷ்பாபு கை விரல்களை மடக்கிக் கூட்டிக் கழித்த பிறகு சொன்னான்: “போயிருந்தேன்!”

“எதுக்காகப் போனீங்க?”

“சினேகிதன் ஒருத்தனோட மனைவி கர்ப்பமா இருந்தாங்க. அது தொடர்பாத்தான் பார்க்கப் போனேன்.”

“நீங்க போனது அவங்க வீட்டுக்கா, ஆஸ்பத்திரிக்கா?”

“ஆஸ்பத்திரிக்குதான்.”

"அது என்னிக்கு?"

"ஒரு வாரம் இருக்கலாம். தேதி சரியா ஞாபகம் இல்லை!"

"நீங்க சொல்லறது சாராம்மா இறந்த அன்னிக்குத்தானே?"

"அது தெரியலையே?"

"சரி பழிக்குப் பழி வாங்குவேன்னு நீங்க ஜேக்கப் ஸ்டீபன் கிட்டச் சொன்னீங்களா?"

"சொன்னேன்."

"அதை நிறைவேத்திட்டிங்க... அப்படித்தானே?"

அதற்கு அவன் பதிலளிக்கவில்லை.

"அன்னிக்கு எத்தனை மணிக்கு டாக்டர் விஜயலட்சுமிக்கு போன் பண்ணினீங்க?"

"நானா?"

"ஆமாம் நீங்களேதான்!"

"நான் போன் எதுவும் பண்ணலை!"

"ஒப்புக்கொள்ள வைக்கிறேன் நான்..." புஷ்பராஜ் அவனது தலைமுடியைக் கொத்தாகப் பிடித்தார்.

"இல்லை சார்... நான் போன் பண்ணவேயில்லை." சுரேஷ் திரும்பவும் உறுதியான குரலில் சொன்னான்.

அவனது முடியிலிருந்து கையை விடுவித்த புஷ்பராஜ் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக உலாவினார்.

"இன்னும் ஒரு கேள்வி. நர்ஸ் தங்கம்மாவை உங்களுக்குத் தெரியுமில்லையா?" புஷ்பராஜ் கேட்டார்.

"தெரியாது சார்."

புஷ்பராஜின் நெற்றியில் சுளிவுகள் உயர்ந்தன.



"எழுந்திருங்க ..." புஷ்பராஜ் அவனை அங்கிருந்து எழுப்பி வெளியே கொண்டு வந்து காரில் ஏற்றினார்.

கார் மறுபடி புறப்பட்டது.

மறுநாள் மாலைப் பத்திரிகையில் இப்படியொரு செய்தி வெளியானது. "டாக்டரைக் கடத்தியவர்கள் அடையாளம் தெரிந்தது!"

விரைவில் டாக்டர் மீட்கப்படுவதுடன், குற்றவாளிகளும் கைதாவர்கள் என்று மேலும் ஹேஷ்யம் சொன்னது பத்திரிகைச் செய்தி.

"உயிரோடவா... கிடையாது. டாக்டரை பிணமாத்தான் கண்டுபிடிக்கப் போறாங்க!" இப்படி ஒவ்வொருவரும் நம்பிக்கையற்று முணுமுணுத்தனர்.

## 7

சாராம்மா இறந்துபோய் ஏழு நாட்களாகி விட்டன. ஆனால், உண்மையில் அதைவிட அதிக நாட்களானதாக ஊராருக்குத் தோன்றியது. பத்திரிகைகளிலும் அந்தச் செய்திக்கு இப்போது அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்கப் படுவதில்லை. ஆனால், குறிப்பிட்ட மாலைப் பத்திரிகை ஒன்று மட்டும் நாள்தோறும் கொலைத் தொடர்பான பரபரப்பான செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டது.

திருவனந்தபுரத்திலிருந்து பரிசோதனை முடிவுகள் வந்தன.

அன்று, பத்திரிகையாளர் அசோகன், கிரைம் பிராஞ்ச் எஸ்.பி-யுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

"என்னங்க அசோகன்... புதுசா ஏதாவது தகவல் கிடைச்சதா?" எஸ்.பி. கேட்டார்

"இருக்கு சார்... சந்தேகத்துக்குரிய ஒரு விஷயம்... நான் நேர்லயே வந்து சொல்றேன் சார்." அசோகன் சொன்னார்.

"சீக்கிரமா வாங்க. இதுக்கு எதுக்காக அனுமதி?" எஸ்.பி. கேட்டார்.

உடனேயே புஷ்பராஜைத் தொடர்புகொண்ட எஸ்.பி அவருக்கும் தகவல் சொன்னார்.

பத்து நிமிடத்துக்குள் புஷ்பராஜும், பதினைந்து நிமிடத்தில் அசோகனும் அங்கு வந்து சேர்ந்தனர்.

மூவரும் எஸ்.பி - யின் அறையில் சந்தித்துக் கொண்டனர்.

"என்ன தகவல் சொல்லுங்க!" டோமி அலெக்ஸ், அசோகனைப் பார்த்துக் கேட்டார்.

அசோகன் தன் தோளில் மாட்டியிருந்த பையிலிருந்து கவர் ஒன்றை வெளியே எடுத்தார்.

'வெட்டிங்' என்ற ஆங்கில வார்த்தை அழகான டிஸைனில் கவரின் மூலையில் அச்சடிக்கப்பட்டிருந்தது. அதற்கு நேர்கீழாக இரண்டு பெயர்களும் அச்சிடப்பட்டிருந்தது. அந்த கவரிலிருந்து திருமணப் பத்திரிகை ஒன்றை எடுத்து மேஜை மேல் வைத்தார் அசோகன்.

"என்ன இது!" என்ற வியப்புடன் கேட்டவாறே டோமி அலெக்ஸ் அந்த கல்யாணப் பத்திரிகையைக் கையில் எடுத்தார்.

"இது யாரோட கல்யாணப் பத்திரிகை... நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களா அசோகன்?" எஸ்.பி. சிரிக்க முயன்று அதில் தோல்வியடைந்தவராகக் கேட்டார்.

"சார் அதை நல்லாப் பாருங்க" அசோகன் சுட்டிக் காட்டினார்.

எஸ்.பி. சசி வெட்ஸ் சீமா.... இதுல என்ன ரகசியம் இருக்கு?"



"அழைப்பிதழ் இல்லை சார் நான் குறிப்பிட்ட விஷயம். அதுக்குப் பின்னால பாருங்க." புஷ்பராஜ் எடுத்துக் காட்டினார்.

டோமி அலெக்ஸ் அதன் பின்புறத்தைப் புரட்டிப் பார்த்தார்.

அதில் நான்கே நான்கு வார்த்தைகள் இருந்தன.

'Help Me - Dr. VIJI' என்ற வார்த்தைகள் கரியால் எழுதப்பட்டவை போலிருந்தன.

"இது எங்கிருந்து கிடைச்சது?" புஷ்பராஜ் கேட்டார்.

"அதுதான் சுவாரஸ்யமே. நாலுசக்கர சைக்கிள் சக்கரத்துக்கு மேல் வண்டி செட் பண்ணி பஞ்சுமிட்டாய் வித்துட்டு வர்ற ஒரு பையன் கிட்டேயிருந்து" அசோகன் கூறினார்.

"எப்படி?" எஸ்.பி. ஆர்வத்துடன் கேட்டார்.

"இந்த பஞ்சு மிட்டாய் மேல எனக்கு ஒரு கிரேஸ் சார். அதை மட்டும் எங்க பார்த்தாலும் வாங்குவேன். அப்படி ஒரு வண்டிக்காரன்கிட்ட நான் வாங்கும்போது விலாசம் மறைந்து போன இந்த கவர் அந்த வண்டியில் கிடந்தது. யதேச்சையா எடுத்தேன். இது அகப்பட்டது."

"இது எப்படி அவன் வண்டியிலே வந்துச்சுன்னு கேட்டிங்களா?"

"கேட்காம இருப்பேனா? அவனுக்குத் தெரியலைன்னு சொன்னான். எங்கேயிருந்தோ பறந்து வந்து வண்டியில விழுந்திருக்கலாம்னு சொன்னான். அப்படியும் நடந்திருக்கலாம்."

"இதுல அவன் பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கு? இதே மாதிரியான ஒரு கிட்நாப்பிங் கேஸை நான் ஏற்கெனவே அட்டெண்ட் பண்ணியிருக்கேன்," புஷ்பராஜ் சொன்னார். அவரது முகத்தில் ஒரு புதிய ஒளி தென்பட்டது.

"நாம ஒரு படி முன்னேறியிருக்கோம். ஒருவன் ஒரு குற்றம் புரியும்போது, இயற்கை அவன் கிட்டேயிருந்து ஏதாவது ஒரு

க்ளூவை தவிர்க்கச் செய்யும். இல்லேன்னா அந்தக் குற்றத்தைக் கண்டுபிடிக்கிறதுக்கான தடயத்தைப் பத்திரப்படுத்தி வைக்கும். இது இயற்கையோட நியதி" புஷ்பராஜ் தனது அனுபவத்தை வெளியிட்டார்.

"அப்படியானா நாம இனி இது எந்த இடம்னு கண்டுபிடிக்கணும்." டோமி அலெக்ஸுக்கு உற்சாகம் பிறந்தது.

"அப்ப முதல்ல நாம அந்தப் பஞ்சு மிட்டாய்க்காரனைக் கண்டுபிடிக்கணும். அதுக்கப்புறம் அவன் அன்னிக்கு எந்தெந்தத் தெரு வழியா வியாபாரம் பண்ணிட்டு வந்தான்னு பார்க்கணும். இதெல்லாம் அவனுக்கு ஞாபகமிருக்குமோ என்னவோ?" சந்தேகத்துடன் கேட்ட புஷ்பராஜ் எழுந்தார்.

"அவன் இப்ப எந்த இடத்துல இருப்பான்னு எனக்குத் தெரியும்." அசோகன் கூறினார்.

"அப்பக் கிளம்புங்க... கையோடவே பார்த்துடலாம்." எஸ்.பி.-யும் எழுந்தார்.

மூவரும் புறப்பட்டனர். அசோகன் குறிப்பிட்ட வழிகளின் ஊடாக விரைந்த ஜீப், பஞ்சு மிட்டாய்க்காரனைக் கண்டுபிடித்தது. நகரின் வடக்குப் பகுதியில் இருந்த பள்ளிக்கூடத்தின் அருகில் மரநிழலில் வண்டியுடன் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தான்.

"ஒண்ணு செய்வோம். நம்ம ஜீப்பைப் பார்த்தா அவன் ஒருவேளை மிரளலாம். பிறகு உளறினாலும் உளறலாம். அதனால நாம இறங்கித் தனித்தனியா போகலாம்." புஷ்பராஜ் சொன்னார்.

"எதுக்கு தனித்தனியா எல்லாரும் போகணும். நான் மட்டும் போயிட்டு வழியை விசாரிச்சுட்டு வர்றேன். எனக்கு இந்த ஊர்ல இருக்கிற ஒவ்வொரு மூலைமுடுக்கும் அத்துப்படி." என்றார் அசோகன்.

'அது நல்ல யோசனை' என்று மற்றவர்களுக்கும் தோன்றியது.



"அப்படியே செய்யுங்க" புஷ்பராஜ் கூறினார்.

அசோகன் பஞ்சுமிட்டாய்க்காரனை நெருங்கினார்.

"தம்பி, எனக்கு ரெண்டு பஞ்சுமிட்டாய் குடு!" அசோகன் நேரடியாக வியாபாரத்தில் ஈடுபட்டார்.

"சார் காலையிலே கூட உங்களைப் பார்த்த ஞாபகம். என் கிட்ட மிட்டாய் வாங்கினீங்க போலிருக்கே?" கண்ணாடி போட்ட தகர டின்னிலிருந்து மிட்டாய் பாக்கெட்டை எடுத்தபடி கேட்டான்.

"ஆமாம்... வாங்கினேன். அது நல்லா இருந்ததாலதான் இப்ப உன்னைத் தேடி வந்திருக்கேன்."

மிட்டாய் பாக்கெட்டுகளைக் கொடுத்து, அதற்கான பணத்தை வாங்கிக் கொண்டான்.

"அப்புறம் இன்னொரு விஷயம்... இன்னிக்குக் காலையில நீ வரும்போதுதானே இந்த கவர் உன் வண்டியில விழுந்து கிடந்தது?" அசோகன் கேட்டார்.

"ஆமாம் நீங்க இன்னுமா இதைக் கையில் வெச்சுக்கிட்டு அலையுறீங்க. அப்படி என்ன சார் இருக்கு அதில?"

"அது பெரிய கதை. நீதான் இப்ப எனக்கு உதவணும். ரொம்ப சுலபம். இன்னிக்கு காலையில நான் உன் கிட்ட மிட்டாய் வாங்கினேனே, அது வரையில நீ எந்தெந்த வீதி வழியா வண்டியைத் தள்ளிட்டு வந்த? முடிஞ்சா எந்த இடத்துல இந்த கவர் வந்து உன் வண்டியிலே விழுந்ததுன்னு சொல்லு?"

"என்ன சார் ஏதாவது பிரச்சினையா?"

"அதெல்லாம் கிடையாது. இதை வெச்சு, நாங்க ஒரு விஷயத்தைக் கண்டுபிடிக்கணும்."

"அவ்வளவு தானா...?" என்று நினைவுபடுத்தி தொடங்கிய தான் வந்த வழியை கேட்டவன் சற்று நேர யோசனைக்குப் பிறகு விளக்கினான்.

அசோகன் ஒவ்வொரு தெருவின் பெயர் மற்றும் பாதையை வரையவும் செய்தார்.

"கிட்டத்தட்ட இந்த இடத்துக்கு வந்தபோதுதான் கவர் வண்டியில வந்து விழுந்ததுன்னு நெனைக்கிறேன்."

"இது ஆளுங்க அதிகமாக் குடியிருக்கிற பகுதி இல்லையே... நீ எதுக்காக இந்த வழியாப் போனே?"

"நான் விடியற்காலையிலேயே கிளம்பிடுறேனே. அதுக்கு நடுவிலே என்னோட வேலைகளும் நடக்கும்."

அசோகன் ஒன்று விடாமல் மொத்தத் தகவல்களையும் குறித்துக் கொண்டார்.

"ரொம்ப நன்றி... இந்தா இதை வெச்சுக்கோ!" என்று சொல்லி இருபது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவனிடம் கொடுத்தார் அசோகன்.

ஜீப்பில் ஏறிய அசோகன் "எல்லாம் பக்காவா நோட் பண்ணியிருக்கேன் சார். வண்டியைக் கிளப்பலாம்." என்றார்.

டோமி அலெக்ஸ் ஜீப்பைக் கிளப்பினார். அசோகன் வழி சொல்லிக் கொடுத்துக்கொண்டே வந்தார்.

நகரைத் தாண்டி வடக்குப் பகுதியில், ரயில்வே கேட்டைக் கடந்து காலனியை ஊடுருவி, ஆள் நடமாட்டம் மிகவும் குறைவான ஒரு பகுதிக்கு வந்தனர்.

"இதுதான். எக்ஸாக்ட்டா அந்தத் தம்பி சொன்ன இடம். இன்னும் சொல்லப் போனா, பாழடைஞ்ச இந்தக் கட்டடத்துக் கிட்டத்தான் அந்த கவர் அவனுக்கு கிடைச்சிருக்கு."

சிறிய காம்பௌண்டுச் சுவருக்குள் ஒரு ரெட்டை மாடிக் கட்டடம். பராமரிப்பு இல்லாமல் பாழ்பட்டுக் கிடந்தது.

அதன் பாதிபாதியான இரண்டு கேட்டுகளில் ஒன்று இடிந்து உட்புறமாக விழுந்து கிடந்தது.



"மனித நடமாட்டம் இருக்கிறதாத் தெரியலையே?" என்ற புஷ்பராஜ் அந்தக் கட்டடத்தை வெளியிலிருந்து ஆராய்ந்தார்.

மேற்பகுதியில் ஒரே ஒரு ஜன்னல் கதவு மட்டும் திறந்து கிடந்தது.

"நாம உள்ள நுழைஞ்சிட வேண்டியதுதான்!" புஷ்பராஜ் ஜீப்பிலிருந்து இறங்கினார்.

மூவரும் கேட்டைக் கடந்து காம்பௌண்டுக்குள் வந்தனர்.

அந்தக் கட்டடத்திலிருந்து எந்தவிதமான சத்தமும் கேட்கவில்லை.

வாசற்கதவை நெருங்கினார்.

அது உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது.

காலிங்பெல் இருந்தது.

புஷ்பராஜ் அழுத்தினார்.

ஆனால், அது உயிரை விட்டிருந்தது.

மின்சாரம் துண்டிக்கப்பட்ட கட்டடம்.

மற்ற இருவரையும் சற்று ஒதுங்கியிருக்கச் சொன்ன புஷ்பராஜ் பின்புறமாக நாலைந்து தப்படிகள் வைத்து ஓடி வந்து கதவைத் தோளால் இடித்தார்.

அந்த அதிர்ச்சியில் அதன் ஒரேயொரு கதவு, தாழ்ப்பாள் பெயர்ந்து உட்புறமாக மல்லாந்தது.

"குட்!" அலெக்ஸ் பாராட்டத் தவறவில்லை.

மூவரும் உள்ளே நுழைந்தனர்.

முன்னறையிலேயே மேற்புறம் செல்லும் படிக்கட்டுகள் தென்பட்டன, மூவரும் அதை நெருங்கினர்.

முதலில் சென்ற அலெக்ஸும் அசோகனும் முதல் படிக்கட்டில் காலை வைத்த அதே விநாடியில்-

"அசைக்கூடாது. அசைஞ்சா..." வார்த்தைகள் முரட்டுக் குரலில் அரைகுறையாக ஒலித்தன.

மேற்புறம் பார்த்தபோது, இரட்டைக் குழல் துப்பாக்கியை அவர்களை நோக்கி நீட்டியவாறு ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது.

சட்டென்று புஷ்பராஜ் படிக்கட்டுகளின் பக்கவாட்டில் நழுவினார்.

டோமி அலெக்ஸும், அசோகனும் என்ன செய்வதென்று புரியாமல் அப்படியே நின்றனர் - கைகளை உயர்த்தியபடி!"

மேலே இருப்பவன் எந்த நேரமும் துப்பாக்கியின் குதிரையை இழுத்து விடலாம். அது அவனது தற்காப்பு முயற்சியும்கூட. புஷ்பராஜ் அதற்குள் படிக்கட்டின் ஓரமாக இருந்த ஓர் அறைக்குள் நுழைந்துவிட்டிருந்தார்.

அந்த அறையிலிருந்து வீட்டின் வெளியே செல்ல ஏதாவது வழியிருக்கிறதா என்று தேடினார். ஒரே ஒரு ஜன்னல் தான் தெரிந்தது. கம்பிகளை வளைக்க முடியுமா என்று பார்த்தார். ம்... ஹூம்! வளைய மாட்டோம் என்றன.

ஒரு விநாடி யோசித்தவர் படிக்கட்டின் கீழ்ப்பகுதியை ஊன்றிக் கவனித்தார். நீண்ட குழாய் ஒன்று அடிப்பகுதியிலிருந்து மேற்புறம் சென்றது.

"நல்ல வாய்ப்பு?" புஷ்பராஜ் தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

அந்தப் பைப்பை பிடித்துக்கொண்டு மேற்புறமாக நகரத் தொடங்கினார். பால்கனியை நெருங்கியவர், மரத்தாலான ரயிலைப் பிடித்துக் கொண்டு மேற்புறம் பார்த்தார்.



துப்பாக்கி வைத்திருப்பவன் இன்னமும் கீழே இருப்பவர்களையே குறி பார்த்துக் கொண்டிருந்தான். அதே நேரம் படிக்கட்டில் இருப்பவர்கள் புஷ்பராஜைக் கவனித்தனர்.

புஷ்பராஜ் சைகை செய்தார். அதைப் புரிந்து கொண்டவர்களாக அலெக்ஸும், அசோகனும் சற்று இடது பக்கமாக நகர்ந்தனர்.

"ஸ்! அசையக் கூடாதுன்னு உங்ககிட்டத்தானே சொன்னேன்." என்ற துப்பாக்கிக்காரன் புஷ்பராஜ் இருக்கும் பக்கமாக வந்தான்.

புஷ்பராஜ் சரியான சந்தர்ப்பத்தில் அவனது காலைப் பிடித்து இழுத்தார். அவன் பின்புறமாக மல்லாக்க விழுந்த கணத்தில் மற்ற இருவரும் மேலேறி வந்தனர்.

விழுந்தவன் சுதாரித்து எழுந்திருப்பதற்குள் புஷ்பராஜின் கால்கள் அவனது மார்பில் பதிந்தன. அதற்குள் துப்பாக்கி புஷ்பராஜின் கைக்கு மாறியிருந்தது.

"எந்த அறையிலப்பா போட்டு வெச்சிருக்கீங்க?" புஷ்பராஜ் துப்பாக்கி முனையை அவனது கழுத்தில் அழுத்தியபடி கேட்டார்.

அவன் இடது புற வாசலை நோக்கிக் கை காட்டினான்.

"சாவி எங்கே?"

பாக்கெட்டிலிருந்து தானாகவே எடுத்துக் கொடுத்தான்.

அவசர அவசரமாகக் கதவைத் திறந்தபோது உள்ளே டாக்டர் விஜயலட்சுமி கட்டிலில் கவிழ்ந்து கிடப்பது தெரிந்தது.

அதற்குள் துப்பாக்கி வைத்திருந்தவனது கைகால்களை அலெக்ஸ் கட்டிப் போட்டிருந்தார்.

"டாக்டர்... டாக்டர்..." கட்டிலை நெருங்கி புஷ்பராஜ் குரல் கொடுத்தார்

அவர் அசையவில்லை.

அருகிலிருந்த டீப்பாயில் கண்ணாடி ஜெக்கில் தண்ணீர் இருந்தது.

அசோகனும், புஷ்பராஜும் டாக்டரை மெதுவாகப் புரட்டிப் படுக்கவைத்து, முகத்தில் நீர் தெளித்தனர்.

டாக்டர் கண்களைத் திறந்தார்.

"பயப்படாதீங்க டாக்டர்... நாங்க உங்களைக் காப்பாத்தத்தான் வந்திருக்கோம்!" டோமி அலெக்ஸ் கூறினார்.

மலங்க மலங்க விழித்தவாறே டாக்டர் விஜயலட்சுமி எழுந்து உட்கார்ந்தார்.

## 8

முன்பின் தெரியாத மனிதர்களைப் பார்த்த டாக்டர் ஒரு கணம் குழம்பினார்.

"உங்களைக் காப்பாத்த வந்திருக்கிற போலீஸ் டிபார்ட்மெண்ட் ஆளுங்கதான். நீங்க எழுந்திருக்க உதவணுமா?" புஷ்பராஜ் கேட்டார்.

"வேண்டாம்!" என்று பலவீனமான குரலில் சொன்னவர் நிதானமாக எழுந்து உட்கார்ந்தார்.

புஷ்பராஜ் தண்ணீர் ஜெக்கை நீட்டினார். அதை வாங்கி டாக்டர் இரண்டு மடக்குக் குடித்தார்.

"கிளம்புங்க டாக்டர் போகலாம். கீழே ஜீப் தயாரா இருக்கு!"



எல்லோரும் ஜீப்புக்கு வந்தனர். ஐந்து பேரையும் சுமந்து கொண்டு ஜீப் அங்கிருந்து கிளம்பியது.

நேராக டாக்டர் விஜயலட்சுமி வீட்டுக்கு முன்னால் வந்து நின்றது ஜீப். அங்கிருந்தபடியே டாக்டர் விஜயலட்சுமி மீட்கப்பட்ட தகவலை எல்லோருக்கும் தெரியப்படுத்தினார் டோமி அலெக்ஸ்.

"உங்களை அடைச்சு வெச்சது யார்?" எஸ்.பி. கேட்டார்.

"தெரியாது!" டாக்டர் பதிலளித்தார்.

"உங்களுக்குத் தெரிஞ்ச யாரும் அங்க வரலையா?"

"அப்படி யாரும் வரலை. சாப்பாட்டு நேரத்துல டாண்ணு சாப்பாடு தவறாம வந்துடும். மாறி மாறி ஆளுங்க காவல் இருந்தாங்க. யாரும் என்கிட்ட எதுவும் பேச மாட்டாங்க. சத்தம் போட்டாலோ தப்பிக்க முயற்சி செஞ்சாலோ கொன்னுடுவோம்னு மிரட்டினாங்க."

"நீங்க ஆஸ்பத்திரியிலே இருந்தபோது உங்களுக்கு போன் பண்ணியது யார்?"

"அது ஒரு பெண் குரல். நான்தான் அத்தைன்னு தப்பா நினைச்சுட்டு வந்தேன். வழியிலே என்னைக் கடத்திட்டுப் போயிட்டாங்க."

"நீங்க வீசியெறிஞ்ச கல்யாண இன்விடேஷன்தான் உங்களை அடையாளம் காட்டிக் கொடுத்தது." புஷ்பராஜ் சொன்னார்.

புஷ்பராஜ் தொலைபேசி மூலமாக ஜேக்கப் ஸ்டீபனுடன் தொடர்புகொண்டு தகவல் தெரிவித்தார்.

"நல்ல வேலை செஞ்சீங்க. டாக்டரைக் கடத்திட்டுப் போனவங்கதான் சாராம்மாவையும் கொலை பண்ணியிருக்கணும்" ஜேக்கப் கூறினார்.

"நான் உங்களை நேர்ல சந்திக்க விரும்புறேன் வரலாம் இல்லையா?"

"தாராளமா.... நீங்க எப்ப வேணும்னாலும் இங்க வரலாம்."

தொலைபேசியை வைத்தார்.

"நான் ஜேக்கப் ஸ்டீபனைச் சந்திக்க வேண்டிய நேரம் வந்துடுச்சு. மீதி விவரத்தையெல்லாம் வந்து சொல்றேன்." புஷ்பராஜ் அங்கிருந்து வெளியேறினார்.

தனது வெள்ளை நிற மாருதியில் ஏறி ஸ்டார்ட் செய்தார் புஷ்பராஜ். கார் ஜேக்கப் ஸ்டீபனின் பங்களாவுக்கு முன்னால் வந்தபோது கேட் திறக்கப்பட்டது.

ஜேக்கப்பே வந்து கேட்டைத் திறந்தார்.

வீட்டுக்குள் நுழைந்த புஷ்பராஜ் சோபா ஒன்றில் அமர்ந்தார்.

"டாக்டர் விஜயலட்சுமியை நாங்களாத்தான் கண்டுபிடிக்க வேண்டி இருந்தது." புஷ்பராஜ் சொன்னார்

"அவங்க ஏதாவது சொன்னாங்களா?" ஜேக்கப் கேட்டார்.

"எல்லா விவரத்தையும் சொல்லிட்டாங்க!"

"அவங்களைக் கடத்திட்டுப் போனது யாருன்னு சொன்னாங்களா?"

"இல்லை... ஆனா, சூசகமான ஒரு தகவல் கிடைச்சது. ஒரு சில மணி நேரம் கூடத் தேவைப்படாது, நாங்க குற்றவாளியைக் கைது பண்றதுக்கு. எப்படியிருந்தாலும் ஜேக்கப் மகிழ்ச்சியடைய இதுல எதுவுமில்லை." புஷ்பராஜ் சொன்னார்.

"குற்றம்னு வந்துட்டா குற்றவாளியைக் கண்டுபிடிக்கணும்கிறது அவசியமாச்சே. சுரேஷ்பாபுகிட்டேருந்து ஏதாவது தகவல் கிடைச்சுதுங்களா?"



"அந்த ஆள் ஒரு அப்பாவி. அந்த அளவுக்கெல்லாம் செயல்பட முடியாதவர்."

"அப்புறம் எப்படி?"

"அது கிடக்கட்டும்! அதெல்லாம் படிப்படியாக நடக்கும். தப்பு செஞ்சவன் தண்டனையை அனுபவிச்சே ஆகணும். அனுபவிப்பான். ஆமா, உங்களுக்கு கலிபோர்னியாவுல முஹம்மது ஹனீபாங்கிறவரைத் தெரியுமா?" புஷ்பராஜ் கேட்டார்.

"முஹம்மது ஹனி... பா... கேள்விப்பட்டிருக்கேன்." சற்று நேர யோசனைக்கு பிறகு தயக்கத்துடன் பதிலளித்தார் ஜேக்கப்.

"அவர் ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியோட ஆடிட்டர். தெரியுமில்லையா?"

"அப்படித்தான்னு நினைக்கிறேன்."

"இன்னிக்கு இன்டர்நெட் மூலமா எனக்கு ஒரு தகவல் கிடைச்சது!"

"என்ன தகவல்?"

"உங்களுக்கு குறிப்பிட்ட ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிலேர்ந்து ஐந்து லட்சம் டாலர் கிடைச்சிருக்கிறதா!"

"ஓ அதுவா? அது ஒரு ஆக்ஸிடெண்டுக்காக!" ஜேக்கப் நிறுத்தி நிதானமாகப் பேசினார்.

"ஆக்ஸிடெண்ட் எங்க, யாருக்கு, எப்ப நடந்தது?" புஷ்பராஜ் கேட்டார்.

"அது..."

"தயங்காமச் சொல்லுங்க ஜேக்கப்..."

"அமெரிக்காவுல நடந்த ஆக்ஸிடெண்டுக்காக... இறந்து போன மார்கரெட் ஒரு பெண்மணி."

"ஒரு பெண்மணி மட்டும்தானா? ஆக்ஸிடெண்டல அவங்க இறக்கும்போது மிஸஸ் மார்கரெட் ஜேக்கப் ஸ்டீபன் இல்லையா? அதாவது உங்க மனைவி!" புஷ்பராஜ் பேச்சை நிறுத்திவிட்டு ஜேக்கப்பின் முகத்தைப் பார்த்தார்.

அந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை.

"அந்த விபத்து எப்படி நடந்ததுன்னு உங்களுக்கு மட்டும் தான் தெரியும்!"

"பிரேக் பிடிக்காமப் போனதால யதேச்சையா நடந்த விபத்து அது!"

"சாராம்மா பேர்லயும் அஞ்சு லட்ச ரூபாய்க்கு இன்ஷ்யூர் பண்ணியிருக்கிங்க இல்லையா?" புஷ்பராஜ் மார்கரெட்டிடம் இருந்து பேச்சை வேண்டும் என்றே மாற்றினார்.

"ஆமாம்... இருக்கு" ஜேக்கப் ஒப்புக்கொண்டார்.

"சாராம்மா இறந்து போனதால அந்தப் பணமும் உங்களுக்குக் கிடைக்கணும் சட்டப்படி. கூடவே ஆஸ்பத்திரியில குறிப்பிட்ட நேரத்துல ஆபரேஷன் நடக்காததால மனைவி இறந்ததுக்கு ஒரு பெரும் தொகைக்கு நஷ்டஈடு வழக்கு தொடரப் போறீங்க ஆஸ்பத்திரி நிர்வாகம் மேல."

"இதை உங்களுக்கு யார் சொன்னது?"

"இன்ஷ்யூர் பணம் உங்களுக்குக் கிடைக்கிறதுக்காக வாதாடப் போற வக்கீலோட உதவியாளர்..."

ஜேக்கப் ஸ்டீபன் பதில் எதுவும் சொல்லாமல் யோசனையில் ஆழ்ந்தார்.



"இன்னொரு தகவல். ஆபரேஷன் தியேட்டர்ல சாராம்மா இறந்தது திடும்னுதான். அது எப்படின்னும் உங்களுக்குத் தெரியும். நான் சொல்றது சரிதானே?" புஷ்பராஜ் கேட்டார்.

இப்போதும் ஜேக்கப் மௌனம் காத்தார்.

"பொட்டாசியம் சயனைடை அவங்க நாக்குல தடவியிருந்தாங்க. அந்தக் குற்றவாளி யார்னு இந்த நிமிஷம் வரை கண்டுபிடிக்கப்படலை. அதை அப்புறமா உங்க வாயாலேயே சொல்ல வெக்கிறது பிரமாதமில்லை.." புஷ்பராஜ் பேசிக்கொண்டே போனார்.

ஜேக்கப் மௌனமாக இருந்தார். அவரது முகம் இறுக்கமடைந்து கொண்டே வந்தது.

"கலிபோர்னியாவுல நடந்த விபத்து இங்க இருக்கிறவங் களுக்குத் தெரிய வாய்ப்பு இல்லை. உங்க மேல சந்தேகம் ஏற்பட்டிருந்தா இதே மாதிரி அங்கேயும் போஸ்ட்மார்ட்டம் நடத்தி உண்மையைக் கண்டுபிடிச்சிருந்தா அதுவும் ஒரு கொலைன்னு நிரூபணம் ஆகியிருக்கும்."

"கொலையா... என்ன சொல்றீங்க?" ஜேக்கப் அதிர்ச்சி அடைந்தவராகக் கேட்டார்.

"திடுக்கிடாதீங்க. அதுவும் ஒரு கொலையேதான். மார்கரெட் பேர்ல எக்கச்சக்கமான பணம் பாங்க்ல இருந்தது. கிட்டத்தட்ட ஏழு லட்சம் டாலர். அதைத் தெரிஞ்சுக்கிட்ட பிறகுதான் அவங்களை நீங்க மனைவியாக்கினீங்க. அதுக்கப்புறம் அடிஷனலா அஞ்சு லட்சம் டாலருக்கு ஒரு இன்ஷ்யூரன்ஸ். எத்தனையோ தடவை அவங்ககிட்ட நீங்க பணம் கேட்டிருக்கீங்க. அவங்க ஒவ்வொரு தடவையும் மறுத்திருக்காங்க. மனசு உடைஞ்சு போன நீங்க அவங்களுக்கு ஸ்லோபாய்ஸன் கொடுக்க ஆரம்பிச்சீங்க..."

புஷ்பராஜ் நிதானமாக சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்து, புகையை மெதுவாக வெளியேற்றிவிட்டுத் தொடர்ந்தார். "ரொட்டியில் வெண்ணெய் தடவும் போது மிகச் சிறிய அளவில் விஷத்தையும் கலந்து கொடுப்பதை வழக்கமாக்கினீர்கள். அது மார்கரெட்டின் உடலில் சேர்ந்து கொண்டே வந்தது. ஒருவர் இறக்கத் தேவையான விஷத்தின் அளவு முழுமையடைந்த அன்றைக்கே காரின் பிரேக் பைப்பை அரத்தால் ராவி விட்டீர்கள்."

"உங்களுக்கு நல்ல கற்பனா சக்தி இருக்கு. எதையெல்லாமோ பார்த்துட்டோ, படிச்சிட்டோ புத்திசாலிங்கிற நினைப்புல கண்டபடி உளறுறீங்க!" ஜேக்கப் ஸ்டீபனுக்குள் கோபம் உயரத் தொடங்கியது.

"சரி உங்களுக்குப் பிடிக்கலைன்னா மார்கரெட்டோட விஷயத்தை விட்டுடலாம். சாராம்மாவோட இதயத்துல எப்படி விஷம் பதிந்தது? அவங்களே சாப்பிட்டாங்களா?" புஷ்பராஜ் கேட்டார்.

"உங்க உளறல்களுக்கு எல்லையே இல்லாமப் போச்சு. சரியான நேரத்துல ஆபரேஷன் நடக்காததால சாராம்மா இறந்தாள். இதுக்கு என்னோட எதிரிகள் யாரோதான் காரணம்."

"நீங்க குறிப்பிடுறது சுரேஷ்பாபுவையா?"

"அவனாவும் இருக்கலாம். வேற யாராவதாகவும் இருக்கலாம்."

"ஏற்கெனவே சொன்னேன். அவன் ஒரு அப்பாவின்னு. அவன் இந்த மாதிரி எதையும் செய்யலை. டாக்டரைக்கூட அவன் நினைச்சா ஏமாத்தியிருக்கலாம். ஆனா, செய்யலை. உங்களோட அடுத்த இலக்கு டாக்டர் விஜயலட்சுமி. அதனாலதான் இத்தனை நாளும் நீங்க அவங்க கண்ணுல படாமத் திரிஞ்சீங்க. அவங்க செஞ்ச தப்பால, உங்க மனைவி இறந்து போனதா ஒரு எண்ணத்தை ஏற்படுத்தி, சிம்பதி சம்பாதிச்சு



அவங்களைக் கல்யாணம் பண்றது இந்தத் திட்டத்தோட க்ளைமாக்ஸ். அப்படித்தானே?" புஷ்பராஜ் கேட்டார்.

"இல்லை... அந்த மாதிரி எந்த எண்ணமும் என்கிட்டக் கிடையாது. இதெல்லாமே உங்களோட அபத்தமான கற்பனையோட பிள்ளைகள்!" ஜேக்கப் ஸ்டீபன் மறுத்தார்.

"கற்பனைன்னு நீங்க சொன்னது அவ்வளவும் உண்மைன்னு நிரூபணமாயிட்டா?"

"அதாவது என் மனைவியை நானே திட்டம் போட்டுக் கொலை பண்ணினேன்னு சொல்றீங்க?" ஜேக்கப் ஸ்டீபனின் கோபம் இப்போது நேரடியாகவே வெளிப்பட்டது.

"நீங்க எவ்வளவு மறுத்தாலும் அதுதான் உண்மை! சாராம்மாவுக்கும் நீங்க ஸ்லோ பாய்ஸன் கொடுத்திருக்கீங்க. டாக்டர் முரளிதரனோட ரிப்போர்ட்ல அது தெளிவா இருக்கு. அதாவது நீங்க மார்கரெட்டுக்குச் செய்த அதே முறை!" புஷ்பராஜ் சற்றும் தயங்காமல் வெளிப்படையாகக் குற்றம் சாட்டினார்.

சற்று நேரம் ஜேக்கப் ஸ்டீபன் மௌனமாக இருந்தார்.

"லிஸியாங்கிற கால்கேர்ள் உங்களோட ஒரு சிநேகிதி. அவங்க தான் டாக்டர் விஜயலட்சுமிக்கு போன் பண்ணினாங்க. அவங்களே அதையெல்லாம் ஒப்புக்கிட்டாச்சு. அவங்க என்னைச் சந்திக்க ஓட்டலுக்கு வந்திருந்தாங்க. இதுக்குப் பின்னால இவ்வளவு பெரிய சதித்திட்டம் இருக்கும்னு அவங்க நினைக்கலை. அஃஃப்கோர்ஸ் அது அவங்களோட தப்பு கிடையாது!"

"நீங்க ஆயிரம் சொன்னாலும் நான்தான் சாராம்மாவைக் கொலை பண்ணினேன்னு உங்களால நிரூபிக்கவே முடியாது!" ஜேக்கப்பின் குரலில் அபத்தமான தன்னம்பிக்கை தெரிந்தது.

"...டிக்கு நீங்க காவலா வைத்த நபரும் ... எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டார். இப்ப என்ன சொல்றீங்க?" புஷ்பராஜ் கேட்டார்.

ஜேக்கப் எபன் சட்டென்று வீட்டுக்குள் ஓடினார். அவர் ... ஏதாவது செய்யப் போகிறார் என்று நினைத்த புஷ்பராஜ் அவரைத் தடுக்கும் நோக்கத்துடன் அவரைப் பின்தொடர்ந்தார்.

... வாசலை நெருங்கியதும் ஜேக்கப் துப்பாக்கியை புஷ்பராஜுக்கு நேராக நீட்டிப் பிடித்திருப்பது தெரிந்தது.

"உங்களுக்குத் தேவைக்கும் மேல அதிகமான தகவல்கள் தெரிஞ்சிருக்கு. இப்படிப்பட்ட அறிவுத்திசாலி இனிமேல் உயிரோட இருக்கிறது உலகத்துக்கு நல்லதில்லை." என்று சொல்லிவிட்டுக் குரூரமாகச் சிரித்தவாறே ஜேக்கப் துப்பாக்கி விசையை அழுத்த முயன்றார்.

இதை எதிர்பார்த்த புஷ்பராஜ் சட்டென்று தரையில் விழுந்து உருண்டு மின்னல் போல் நகர்ந்து, ஜேக்கப்பின் காலைப் பிடித்து பின்புறம் வீசினார்.

வெடியோசையுடன் அவர் மல்லாக்க விழுந்தார்.

மறு விநாடி ஜேக்கப் எபன் புஷ்பராஜின் கைகளுக்குள் இருந்தார்.

23383.

மறுநாள் பத்திரிகைகள் எல்லாம் நம்பமுடியாத இந்தச் செய்தியை முக்கியத்துவம் தந்து பிரசுரித்தன.

மிகவும் கெட்டிக்காரத்தனமான முறையில் வழக்கின் சிக்கல்களைக் களைந்த புஷ்பராஜ், டாக்டர் அலெக்ஸ், பத்திரிகையாளர் அலெக்ஸ் ஆகியோரை இந்தப் பத்திரிகைகள் குறிப்பிட்டுப் பாராட்டவும் தவறவில்லை.